மிதுஸ் ஜுவல்லரி
Mithus Jewellery
OPEN 7 DAYS A WEEK
322-324 London Rd., Croydon CR0 2TJ
Ph: 020 8683 1756 Fax: 0208683 1792
DIAMOND PALACE
Ph: 0208767 5333 Fax: 02087675814
76 Tooting High St., London SW17 0RN

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

+44(0) 208 33 56780
WWW.SUNTVUK.COM

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk
UN 44 July/Aug 2005
For News & Advertising: 020 8952 5677

## லண்டன் குண்டு வெடிப்புகள் :

# இலங்கையில் குண்டு வெடிப்புகளைத் தடுக்கும்

லண்டனில் வெடித்த குண்டுகள் இலங்கையில் ஒரு பலமான தாக்கத்தையே ஏற்படுத்தி உள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக இலங்கையின் அரசியல் நிலவரம் சர்வதேச அரசியல் நிலைப்பாடுகளை ஒட்டியே மாற்றமடைந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. லண்டனில் வெடித்த குண்டுகள் இலங்கையைச் சூழ்ந்துள்ள யுத்த மேகங்களை கலைக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். அண்மைக்காலமாக விடுதலைப் புலிகள் போர் முழக்கங்களை முழங்க, மறுமுனையில் அரசு தனது பாதுகாப்பை பலப்படுத்த லண்டனில் வெடித்த குண்டுகள் அவர்களது குண்டுகளை மீண்டும் செயலிழக்க வைத்துள்ளது.

ஏற்கனவே செப்ரம்பர் 11, 2001ல் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்ந்ததை அடுத்து சர்வதேச சமூகம் வி.புலிகளையும் இலங்கை அரசையும் சமாதானத் தீர்வுக்கு நிர்ப்பந்தித்தது. அடுத்த சில மாதங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது. அமெரிக்கா மீதான தாக்குதலும் அதற்கு எதிராக மேற்குலகின் பதிலடியாக அமைந்த பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் சர்வதேச விடுதலைப் போராட்டங்களை பின்னடையச் செய்தது. தற்கொலைத் தாக்குதலை பிரதானமாகக் கொண்ட வி.புலிகளை நிரந்தரமாக பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துவிட்டது. மேலும் மேற்குலக ஊடகங்களின் தீவிர பிரச்சாரம் ஆயுதப் போராட்டங்கள் பற்றிய சர்வதேசப் பார்வையையே மாற்றி அமைத்து உள்ளது.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி 34 மாதங்களாகியும் ஆக்கபூர்வமான தீர்வு ஏற்படாத நிலையில் கடந்த ஆண்டு டிசம்பரில் சுனாமி தாக்கி பேரழிவை ஏற்படுத்தியது. இப்பேரழிவு மக்களை ஒற்றுமைப்படுத்தி விடாத வகையில் அரசியல் சக்திகள் செயல்பட்டு இனக்குரோதத்தை தக்கவைத்து கொண்டன. பேரழிவுக்கான நிதியை பகிர்ந்து கொள்வதில் - பொதுக்கட்டமைப்பில் பிரச்சினை, இரு தரப்பிலும் அதிகரித்து வரும் தனிநபர் படுகொலைகள், விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்து சென்ற கருணா அணியினரின் செயற்பாடுகள் என்பன அண்மைக்காலமாக இலங்கையில் யுத்த மேகங்கள் சூழக் காரணமாக அமைந்தது. (7ம் பக்.)

## லண்டன் குண்டு வெடிப்புகள் : மக்களின் உரிமைகளுக்கு ஆப்பு வைக்கிறது அரசு

யூலை 7 குண்டுவெடிப்புகளும் அதனைத் தொடர்ந்து யூலை 14 தோல்வியடைந்த குண்டுவெடிப்புகளும் பிரித்தானிய அரசின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. குண்டு வெடிப்புடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் மக்களின் சிவில் உரிமைகளை பாதுகாப்பின் பெயரில் பறிக்கும் சட்டங்களை இயற்ற அரசு முயல்கிறது. இதனால் குறிப்பாக பிரித்தானியாவில் வாழும் சிறுபான்மை இனங்கள் மிகவும் பாதிக்கப்பட உள்ளன.

09/11க்குப்பின் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்றன கொண்டுவரப்பட்டன. தஞ்சம் கோருவோரின் விண்ணப்பங்கள் மீதும் கடுமையான போக்கு கடைப்பிடிக்கப்பட்டு தஞ்சம் கோருவதற்கான கதவுகளும் அடைக்கப்பட்டது. தற்போது இவற்றை மேலும் கடுமையாக்க செயற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

பிரதான எதிர்க்கட்சியான கொன்சவேடிவ்வும் பெரும்பாலும் தொழிற்கட்சி அரசுடன் இவ்விடயங்களில் ஒரே கருத்தையே கொண்டிருப்பதால் அரசுக்கு புதிய சட்டங்களை (4ம் பக்.)

## குண்டு வெடிப்புகளின் எதிரொலி விடுதலைப் போராட்டங்கள் பின்னடைவு

மேற்குலகில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் குண்டுத் தாக்குதல்கள் ஒட்டு மொத்தமாக விடுதலைப் போராட்டங்களையும் பலவீனமடையச் செய்துள்ளது. அமெரிக்க இரட்டைக் கோபுரங்களின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து பயங்கரவாதம் என்பது மேற்குலகின் நாளாந்த பாவனைச் சொல்லாகிவிட்டது. தற்போது லண்டனில் வெடித்த குண்டுகளும் அதனையே வலியுறுத்துகின்றன.

மத அடிப்படைவாதிகளின் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் சர்வதேசசமூகத்தின் பார்வையையும் மாற்றி அமைத்து உள்ளது. இன்று அரச பயங்கரவாதத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளும் பயங்கரவாத நடவடிக்கையாகவே கணிக்கப்படுகிறது. செச்னிய விடுதலைப் போராட்டம், காஷ்மிர் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் மார்க்ஸிய லெனினிய அமைப்புகளின் விடுதலைப் போராட்டங்கள், நேபாளில் நடைபெறும் மார்க்ஸிஸ்டுக்களின் போராட்டம், இந்தோனேசியாவின் ஆச்சே மாநிலத்தின் விடுதலைப் போராட்டம், (7ம் பக். பார்க்க)

Over 20 Years of Experience
MONEY TRANSFERS TO SRI LANKA
FAST CASH
INCLUDING - INDIA, USA, CANADA, AUSTRALIA MIDDLE EAST, ASIA, JAPAN + 120 COUNTRIES
COLLECT YOUR MONEY SAME DAY OR WE CREDIT ANY BANK ACCOUNT
FAST - SAFE - RELIABLE SERVICE
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.
Transfer fees from only £5
SEYLAN
PEOPLE'S BANK
BOC HSBC
Transfer Hotline
020 8886 4488
Currency Exchange Corporation Ltd.

MIDDX TYRES LTD
SPECIALISTS IN PERFORMANCE TYRES
NEW, PARTWORN & REMOULDS
MOT PREPARATIONS . STEERING EXHAUSTS . WHEELS . SUSPENSION . 4 WHEEL ALIGNMENTS . BRAKES
Starter Motors, Alternators and Batteries
41-43 THE GREEN SOUTHALL MIDDLESEX
TEL & FAX: 020 8813 9154

Paul Bakers
Specialists in Egg & Eggless Cakes for all occasions
Also Bread, Baps, Rolls, etc.
CALL 020 8813 8322
SOUTHALL 020 8574 8388
32, SOUTH ROAD, / 143, NORWOOD ROAD
ALSO IN FELTHAM & ISLEWORTH

IDEAL GLAZING
With over 20 years of experience
MANUFACTURERS & INSTALLERS OF uPVC AND ALUMINIUM
FOR FREE ESTIMATE CALL
020 8574 8342
or
Fax: 020 8843 1903
IDEAL GLAZING (EURO) LTD
29 The Green Street, Southall, Middlesex, UB2 4AN

TVS
TVS CASH & CARRY
Importers & wholesalers of ethnic foods. Specialists in Afro-Caribbean, African, Indian, Chinese, Sri Lankan & Halal food products.
All branded grocery & drinks available at competitive prices.
Major credit cards accepted, Cheque facility subject to conditions.
For details, Contact Us on
0208 965 2885
or visit
TVS HOUSE 63 Minerva Road, Park Royal, London NW10 (Opposite ASDA)

C & S Builders Merchant (Stamford Hill) Ltd
NEW SUPER STORES over 1 acre site
SKIPS FOR HIRE
Special Offers on Boilers
1. Vaillant £ 523 + VAT
2. Biast £ 310 + VAT
OPEN 7 DAYS A WEEKS
Call: 020 8498 200
C & S HOUSE: 151, Blackhorse lane, London E17 5QU, Tel: 020 8498 20
276-286 Stamford Hill, London N16 6TY, Tel: 020 8809 5373
122-126 Grove Green Road, London E11 4EL, Tel: 020 8539 2391
E-mail: sales@csbuildersmerchants.co.uk www.csbuildersmerchants.co.uk
Also at LEYTON & STAMFORDHILL

Baba Cash and Carry
Member of LANDMARK
Specialise in whole sale of wine, sprit and soft drink.
cq;fs; tpahghuj;Jf;Fj; Njitahd Fbghdq;fs; midj;ijAk; nkhj;j tpiyapy; ngw;Wf;nfhs;s KbAk;.
Unit 1C, Chailey Industrial Estate, Pump Lane, Hayes, Middlesex UB3 3NB
Tel: 020 8589 0000 Fax: 020 8573 0000

## குறைபாட்டுடன் தடுப்பு மையங்கள்

Harwich International Airport, ManchesterAirport, Port of Dover ஆகிய இடங்களில் உள்ள தற்காலிக தடுப்பு மையங்களில் உள்ள குறைபாடுகள் வெளிவந்துள்ளது. சிறைக்கூடங்களின் தலைமை பரிசோதகர் Anne Owers மேற்படி முகாம்களில் மேற்கொண்ட திடீர் பரிசோதனைகளில் இது வெளிவந்துள்ளது. ஒழுங்கான உடனுக்குடனான உடல்நல சேவைகள் குறைவாக உள்ளது; குறைவான செயற்பாடுகள் அல்லது உடற்பயிற்சிக்கான வசதிகள் போதிய அளவு இல்லை; தற்கொலை, தம்மைத் தாமே தாக்குவது, சிறுவர்கள் ஆகியவற்றுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை; சட்ட ஆலோசனை பெறுவதற்கான வழிகள் குறைபாடாக உள்ளது போன்றவற்றை Anne Owers தனது பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளார்.

இத்தற்காலிக தடுப்பு முகாம்களில் பிரித்தானியாவுக்குள் நுழைய அனுமதிக்கப்படாத பயணிகள் தடுத்து வைக்கப்பட்டு உடனடியாகத் திருப்பி அனுப்பப்படுகின்றனர். மேலும் பிரித்தானியாவில் இருந்து திருப்பி அனுப்பப்படுவதற்கு தயாராக உள்ளவர்களும் ஏனைய தடுப்பு முகாம்களில் உள்ளவர்களும் கூட இங்கு தடுத்து வைக்கப்படுகின்றனர். இத்தற்காலிக மையங்களில் ஒரு வாரம் வரை ஒருவரைத் தடுத்து வைக்க முடியும்.

## கார் முகவரை கடத்தி கப்பம் கேட்டவர்களுக்கு சிறைத்தண்டனை

கார் விற்பனை முகவர் அற்புதசிங்கம் டேவிட் (26) என்பவர் கடத்தப்பட்டு கப்பம் கேட்டு, தாக்கப்பட்டு, அவரிடம் கொள்ளை அடித்ததற்காக நால்வருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. செல்வந்தரான கார் ஷோறூம் முதலாளி பார்ஹாட் ரெய்லர் கடனை தீர்த்துக்கொள்ள மூன்று செக்கியூறிரிகாட்களை வாடகைக்கமர்த்தி அற்புதசிங்கம் டேவிட்டை கடத்தியதற்காக மூன்றரை ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. நீதிபதி திமோத்தி லோறன்ஸ் தனது தீர்ப்பில் கார் ஷோறூம் முதலாளி பார்ஹாட் ரெய்லரே இதனை திட்டமிட்டு செய்ததாக தனது தீர்ப்பில் கூறினார். வாடகைக்கு அமர்த்தப்பட்ட செக்கியூறிரிகாட்கள் மூவரும் அற்புதசிங்கம் டேவிட்டை தடுத்து வைத்து கொள்ளை இட்டதை ஒத்துக்கொண்டனர். அவர்கள் (மார்க் ரெய்லர் 41, வய்னே ஹோல்ஸ்வேர்த் 44, ஜோசப் ஓ நெய்ஸ் 28) ஒவ்வொருவருக்கும் தலா மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

**சம்பவத்தின் பின்னணி :**

ஹரோ தெற்கு மல்வேர்ன் அவனியூவைச் சேர்ந்த அற்புதசிங்கம்; செல்வந்தரான கார் ஷோறூம் முதலாளி பார்ஹாட் ரெய்லரின் நுரசழறயல ஆழவழசள விற்பனை முகவராக இருந்தார். அற்புதசிங்கம் டேவிட் ஏற்படுத்திய 6 கார் விற்பனைகளில் காரை வாங்கியவர்கள் ஒத்துக்கொண்ட நிதி ஒப்பந்தத்தை மீறினர். அதனை அடுத்து அற்புதசிங்கம் டேவிட் செப்ரம்பர் 12, 2004 அன்று ஸ்ரான்மோர் ரியூப் ஸ்ரேசன் முன்னாக போர்ட் போக்கஸ் காரில் கடத்தப்பட்டார். கடத்தப்பட்ட போது அற்புதசிங்கம் டேவிட்டை கொல்வோம் அல்லது முழங்கால் சிரட்டையை நொருக்குவோம் என கடத்தியவர்கள் எச்சரித்ததாக அரசதரப்பு வழக்கறிஞர் டேவிட் ஹீவிற் தெரிவித்தார்.

கடத்திச் சென்றவர்கள் நிதி ஒப்பந்தத்தை மீறிய கார்களைத் தேடி பல முகவரிகளுக்குச் சென்றனர். பின்னர் அற்புதசிங்கம் டேவிட்டின் பாங் காட்டையும் அதன் பின் நம்பரையும் திருடி £600 களவாடினர். இரு மணி நேரம் இடம்பெற்ற இந்த கடத்தல் நாடகத்தில் முதலாளி பார்ஹாட் ரெய்லர் தொடர்ச்சியாக தொடர்பில் இருந்ததாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. சச்சரவு தீர்க்கப்படும் வரை அற்புதசிங்கம் டேவிட்டை விட வேண்டாம் என முதலாளி பார்ஹாட் ரெய்லர் கடத்தியவர்களுக்கு அறிவுறுத்தி உள்ளார். இறுதியாக ஹட்போர்ட் செயரில் உள்ள பெற்றோல் ஸ்ரேசனில் வைத்து அற்புதசிங்கம் டேவிட் விடுவிக்கப்பட்டார். அங்கிருந்து பொலிசாருக்கு தகவல் கொடுத்தார்.

இவ்வழக்கு கில்ட்ஹோல் கிறவுன் நீதிமன்றத்தில் யூலை முற்பகுதியில் நடைபெற்றது.

## கழுத்தில் கத்தரிக்கோல் வைத்து கொள்ளை

சவுத்எண்ட்டில் பெண்ணின் கழுத்தில் கத்தரிக்கோலை வைத்து கொள்ளையிட்ட கும்பல் தொடர்பாக இலங்கையர் ஒருவரை பொலிசார் தேடுகின்றனர். Leigh எனும்இடத்தில் Rectory Grove வீதியில் உள்ள கோரல் பெற்றிங் சொப்பில் 19 யூன் மாலை 5:30 மணியளவில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடையினுள் நான்கு பேர் கொண்ட கும்பல் நுழைந்ததாகவும் அதில் ஒருவர் காசாளர் பகுதிக்கு பாய்ந்து அங்கிருந்த பெண்ணின் கழுத்தில் கத்திரிக்கோலை வைத்து பயமுறுத்த ஏனையவர்கள் அங்கிருந்து பல ஆயிரம் பவுண்களைத் திருடி உள்ளனர்.



இச்சம்பவத்தில் பெண்ணுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. ஆனால் அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இப்பெண்ணை கத்தரிக்கோல் முனையில் வைத்திருந்தவர் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர் என அப்பகுதி பொலிசார் நம்புகின்றனர்.

இச்சம்பவத்தின் பின் Benfleet பகுதியில் High Road வீதியில் இருந்த லாட்புரோக்ஸ் பெற்றிங் சொப்பிலும் கொள்ளை இடம்பெற்றுள்ளது. அதே கொள்ளைக் கும்பலே இச்சம்பவத்திலும் ஈடுபட்டிருக்கலாம் என பொ லிசார் கருதுகின்றனர். தகவல் தெரிந்தவர்கள் 017 0243 1212 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க முடியும்.

கொள்ளைக் குழு உறுப்பினர் எனச் சந்தேகிக் கப்படும் ஒருவரின் படத்தை பொலிசார் வெளயியிட்டு உள்ளனர்.

## £9,000 பணத்துக்கு £58,000 கேட்டு நீதி மன்றம் சென்றவருக்கு £5,000 நட்டம்

£9,000 பவுண்களை வட்டிக்குக் கொடுத்தவர்; £58,000 கேட்டு நீதிமன்றம் சென்று £5,000யை இழந்தார். இவ்வழக்கு இல்பேர்ட்டில் நடைபெற்றது. முன்னர் நண்பர்களாக இருந்த இரு `தமிழர்கள் நீதிமன்றத்தில் மோதிக் கொண்டனர். 1999 நவம்பரில் ஆயிரத்துக்கு £35 பவுண் என்ற அடிப்படையில் ஒருவர் வட்டிக்கு தனது நண்பரிடம் இருந்து கடன் பெற்றிருந்தார். வட்டியும் முதலுமாக £20,000 சில ஆண்டுகளில் கொடுக்கப்பட்டது. ஆனால் இடைப்பட்ட சிறிது காலம் வட்டி செலுத்தப்படவில்லை. ஆனால் கடன் கொடுத்தவர் ஆரம்பத்தில் இருந்தே வட்டிக்கணக்கு போட்டு £58,000 கேட்டு நீதிமன்றம் சென்றார்.

இவ்வழக்கு தமிழ் சமூகத்தில் காணப்படும் நெழிவு சுளிவுகளையும் சட்டத்துக்கு புறம்பான செயற்பாடுகளையும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது. கடன்கொடுத்தவர் மற்றையவருடன் ஒரு உடன்பாட்டுக்கு வர முயற்சி செய்திருந்தார். இறுதியில் வழக்கை கைவிட்டார். இதனால் வழக்கு எடுக்கப்பட ஏற்பட்ட £5,000 செலவை செலுத்த வேண்டிய கட்டாயத்துக்கு கடன் கொடுத்தவர் தள்ளப்பட்டு உள்ளார்.

நீதி மன்றம் சென்ற இந்த வட்டிக் கதை சிறுவர்களுக்கான நீதிக் கதையாக மாறி உள்ளது.

## புதிய கரங்களில் தீபம் தொலைக்காட்சி

தீபம் தொலைக்காட்சி அண்மையில் கை மாற்றப்பட்டு உள்ளது. ஐந்து வருடங்களுக்கு முன் யூன் 2000 ஆண்டு ஆசிய மில்லியனர்களில் ஒருவரான துரை பத்மநாதனாலும் அவரது நண்பர் செல்வகுமாராலும் ஆரம்பிக்கப்பட்ட இத்தொலைக்காட்சியை தற்போது கொங்கொங்கில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் GoldQuest International Ltd என்ற நிறுவனம் வாங்கியுள்ளதாக தொலைக்காட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான கணக்கியல் - ஓடிற் வேலைகள் ஏற்கனவே நடைபெற்று உள்ளது. இருந்த போதும் இது தொடர்பான உத்தியோகபூர்வமான அறிவிப்புகள் எதுவும் வெளிவரவில்லை. இக் கைமாற்றத்தை அடுத்து தீபம் தொலைக்காட்சியின் நிர்வாகத்தில் முக்கிய மாற்றங்களை இன்னும் சில வாரங்களில் எதிர்பார்க்கலாம்.

தற்போது இலாபமீட்டாத நிலையில் இயங்கும் தீபம் தொலைக்காட்சியை பொறுப்பேற்றுள்ள புதிய நிறுவனம் தொலைக் காட்சியின் செலவீனங்களை மட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தீவி ரமாக ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது. சம்பளம் போன்ற நிர்வாகச் செலவுகள், நிகழ்ச்சிகளின் கொள்வனவுச் செலவுகள், ஒளிப்பதிவு மற்றும் ஒளிபரப்பில் மாற்றங்கள் என்பன எதிர்பார்க்கப்படுகிறது. புதிய நிறுவனமான GoldQuest International Ltd சார்பாக தீபம் தொலைக்காட்சியின் நிலைமைகளை ஆராய்ந்து மாற்றங்களை மேற்கொள்ள அந்நிறுவன பிரதிநிதி ஒருவர் லண்டன் வரவுள்ளார்.

தொலைக்காட்சியை வாங்கியுள்ள புதிய நிறுவனமான GoldQuest International Ltd தங்க பொருட்களை விற்பனை செய்யும் ஒரு பல்தேசிய நிறுவனம். இதன் கிளை அலுவலகங்கள் உலகின் முக்கிய தலைநகரங்களில் அமைந்துள்ளது. மலேசிய நிறுவனமான GoldQuest International Ltd , அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் ஒளிபரப்பாகும் சிகரம் தொலைக்காட்சியின் (Tamil Vision Network ) உரிமையாளர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிகரம், தீபம் தொலைக்காட்சிகள் ஏற்கனவே இணைப்பு பாலம் ஒன்றை ஏற்ப டுத்தி இருந்தன. தற்போது இடம்பெற்ற கைமாற்றம் அதனை மேலும் வலுப்படுத்தி உள்ளது.

தீபம் தொலைக்காட்சி கைமாறியது நன்மைக்கா என்பது நிர்வாகத்தில் ஏற்படும் புதிய மாற்றங்களிலேயே தங்கியுள்ளது. இத்தொலைக்காட்சிகளின் இணைவு இரு வெவ்வேறு கண்டங்களில் உள்ள தமிழ் மக்களிடையே ஒரு பாலத்தை உருவாக்கும் என்பதில் ஐய மில்லை. மேலும் பார்வையாளர் பரப்பையும் இது விரிவுபடுத்தி உள்ளது. இவ்விணைவு வெற்றிகரமானதாக அமைந்தால் வட அமெரிக்கக் கண்டத்தை நோக்கி இத்தொலைக்காட்சிகள் நகரும். அதற்கான பார்வை ஒன்று ஏற்கனவே இருந்ததை எம்மால் உறுதிப்படுத்தக் கூடிய தாக உள்ளது.

**காவடி எடுக்கத் தடை :** ஆலயங்களில் காவடி எடுப்பது சர்ச்சைக்கு உரியதாகிறது. வேல் போன்றவற்றை குற்றி காவடி எடுப்பது தற்காலச் சூழலுக்கு ஒவ்வாதது என சில ஆலயத் தலைவர்கள் கருதுகின்றனர். ஆனால் கடவுளுக்கு நேர்ந்து கொண்டவர்கள் தங்கள் நேர்த்தியை நிறைவேற்றியே தீரப் போவதாக தெரிவிக்கின்றனர். எந்த விதிமுறைகளையும் அறிமுகப்படுத்து முன் மக்களுக்கு அது பற்றி விளக்கமளிக்க வேண்டும். ஆலயங்களும் அதன் செயற்பாடுகளும் பற்றிய மக்கள் விவாதம் தமிழ் சமூகத்துக்கு அவசியம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கடன் கொடுத்தவர் கொலை

யூன் முற்பகுதியில் ஜேர்மனியில் தமிழ் இளைஞர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டு உள்ளார். கொல் லப்பட்டவரின் உடல் அரை குறையாக எரிந்த நிலையில் பொலிசாரால் மீட்கப்பட்டது. இவரிடம் பெரும் தொகைப் பணத்தை கடனாக வாங்கிய ஒருவரே இக்கொலையைச் செய்திருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

## காதல் குத்து :

ஒரு தலைப்பட்சமாக காதலித்து வந்த இளைஞன் தனது காதலை மறுத்ததற்காக யுவதியை குத்தியுள்ளார். இச்சம்பவம் வடக்கு இலண்டனில் இடம் பெற்றது. காயமடைந்த 17 வயது தமிழ் யுவதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

## முஸ்லீம்கள் மீது பல நூறு தாக்குதல்கள்

லண்டன் குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து முஸ்லீம்கள் மீதான தாக்குதல்கள் சடுதியாக அதிகரித்து உள்ளது. ஒரு கொலை உட்பட முஸ்லீம்களுக்கு எதிராக முதல் மூன்று வாரங்களிலும் 260க்கும் மேற்பட்ட தாக்குதல் சம்பவங்கள் பதிவாகி உள்ளது. தீவிர வலதுசாரிப் பத்திரிகைகள் முஸ்லீம் சமூகத்துக்கு எதிரான பிரச்சாரத்தை தீவிரமாக்கி உள்ளன. முஸ்லீம் பெண்கள் ஹிஜாப் அணிந்து செல்வதை சிந்திக்கும் படி முஸ்லீம் தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

**பூபாளராகங்கள் விருது பறி□ முதல் :** பூபாளராகங்கள் சிறுகதை போட்டியில் முதற்பரிசு பெற்ற ஜேர்மனியைச் சேர்ந்த கருணாகரமூர்த்தியின் விருது மீளப் பெறப்பட்டு உள்ளது. போட்டிவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டதால் விருது பறிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**விளையாட்டு நிகழ்வுக்குத் தடை :** பிரித்தானியத் தமிழ் ஒன்றியம் ஒக்ஸ்ட் இறுதியில் நடாத்த இருந்த விளையாட்டு நிகழ்வு இவ்வாண்டு மீண்டும் தடை செய்யப்பட்டு உள்ளது. கடந்த ஆண்டும் இந்நிகழ்வு தடைசெய்யப்பட்டது தெரிந்ததே. இளைஞர்கள் பொதுநிகழ்வுகளில் கலந்துகொண்டு வன்முறையில் ஈடுபடுவதால் தமிழ் நிகழ்வுகளுக்கு பொலிசார் தடைவிதித்து வருகின்றமை தெரிந்ததே.

T.C.S. TUTORIAL COLLEGE
Celebrating 10 years of Education Excellence
Offers first class education in small classes
- GCSE's - full and part time subjects
- Computing courses
- EFL and ESOL English classes - all levels
- Saturday School for Children
- Full time GCSE studies for 14-16yrs old.
Call Now:
Tel: 020 8206 2988
TCS Tutorial College, Alpine House, Honeypot Lane, Kingsbury, London NW9 9RX

Shop for Sale
East London
News grocery and Off-LIcence
New lease 16 years
Taking £6/7000 per week
Key money £60000 ono
Call 0790431 7029
or 0793149 1157

### தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி, .............. தொடரும் குழப்பங்கள்

# சாமியை ஆட்டுவிக்கும் ஆசாமிகள்

லண்டனில் உள்ள ஈழத்தமிழர்களின் நாட்காட்டியில் கலண்டரில் உள்ள முக்கியமான தினங்கள் கடந்த சில வருடங்களாகவே சர்ச்சைக்குரியனவாக உள்ளது. தமிழ் இந்துக்களின் முக்கிய தினங்களான தைப்பொங்கல், வருடப் பிறப்பு, தீபாவளி, நவராத்திரி மற்றும் விரத தினங்கள் நாட்களில் வேறுபடுகின்றன. புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் ஏன் இத்தினங்கள் தொடர்பாக குழப்பப்படுகின்றனர் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

நாட்காட்டிகள் :


நாட்காட்டிகள் இரு வேறு அடிப்படைகளில் கணிக்கப்படுகின்றன. ஒன்று திருக்கணித பஞ்சாங்கம் மற்றையது வாக்கிய பஞ்சாங்கம். திருக்கணித பஞ்சாங்கம் (தொடர்ச்சி 6, 10ம் பக்.)



தமிழ் நாட்காட்டிகளின் குழப்பத்திற்குக் காரணமான சீவரத்தினம் (இடம்), சச்சி (வலம்) கடந்த ஆண்டு கை கொடுத்துக் குழப்பத்தை முடிவுக்கு கொண்டு வருவதாகக் கூறினர்.

## Bye Bye
## சீவரத்தினம் ஐயா

Dr.நித்தியானந்தன் அதிபரான London Tamil Centreஇன் தற்போதைய தலைவர் சீவரத்தினத்துக்கு ஏனைய உறுப்பினர்கள் யாவரும் bye bye சொல்லிவிட்டார்கள். அண்மைக்காலமாக மிகவும் சர்ச்சைக்குரிவராக மாறியிருக்கும் சீவரத்தினம் பாடசாலை தேர்தலில் நின்றால் தாம் ஆதரிக்கமாட்டோம் என்று ஏனைய உறுப்பினர்கள் கைவிரித்து விட்டதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



அதனால் கோபமடைந்த அவர் அப்பகுதியில் போட்டிப் பாடசாலை ஒன்றை அமைக்க முயற்சிக்கின்றார். அவர் ஈழபதீஸ்வரருக்கு போட்டியாக கோயில் கட்ட £ 900,000 நிதி கேட்டு பத்திரிகையில் விளம்பரப்படுத்தி உள்ளமை தெரிந்ததே.

# லண்டனின் குண்டு வெடிப்பில் உயிரிழந்த தமிழ் மகளுக்கு இன, மத பேதமின்றி பல நூற்றுக்கணக்கானோர் இறுதி அஞ்சலி

லண்டனில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலியான சயனுஜா பரதசங்கரியின் (30) இறுதி அஞ்சலி யூலை 16ல் இடம்பெற்றது. யூலை 7ல் இடம்பெற்ற லண்டன் குண்டு வெடிப்புக்குப் பலியானவர்களில் சயனுஜாவின் மரணச்சடங்கு இரண்டாவதாக இடம்பெற்று உள்ளது. வங்கியில் காசாளராக பணியாற்றும் சகாரா ஸ்லாம் (20) இன் மரணச்சடங்கு ஸ்லாமிய முறைப்படி சயனுஜாவின் மரணச்சடங்குக்கு முன்தினம் இடம்பெற்றது. சயனுஜாவின் இறுதிக் கிரியைகள் கத்தோலிக்க முறைப்படி காலையில் 10:30 முதல் 11:30 வரை இடம்பெற்றது. அவரது பூதவுடல் கென்சல் றைஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டு சமயக் கிரியைகளுக்குப் பின் கென்சல் றைஸ்




தனது சகோதரியுடன் (வலம்) சயனுஜா காணப்படுகிறார்

கிறிமற்றோரியத்தில் இறுதி அஞ்சலிக்குப்பின் அடக்கம் செய்யப்பட்டது.

ஓல்கேட்டில் உள்ள றோயல் மெயிலில், Assistant Purchasing Manager ஆக பணியாற்றும் சயனுஜா வழமைக்கு மாறாக அன்று ஒரு மணிநேரம் தாமதமாக வேலைக்குப் புறப்பட்டார்.

(தொடர்ச்சி 7ம் பக்.)



## லண்டனில் கொல்லப்பட்ட இளைஞரின் உடல் இலங்கையில் தகனம் செய்யப்பட்டது

படுகொலை செய்யப்பட்ட பிரபாகரன் கிருஷ்ணசாமி (22) என்ற இளைஞருக்கு யூலை 16ல் அஞ்சலி செலுத்தப்பட்டது. கிழக்கு லண்டனில் இடம்பெற்ற அஞ்சலியில் அவரது உற்றார், உறவினர்களுடன் 50 வரையான நண்பர்களும் கலந்து கொண்டனர். பிரபாகரனுக்கு செய்யும் அஞ்சலி கொலையாளியை கண்டு பிடிப்பதற்கு பொலிசாருக்கு முழுமையாக ஒத்துழைப்பதே என அங்கு அஞ்சலி செலுத்திய உறவினர் ஒருவர் தெரிவித்தார். அஞ்சலிக்குப் பின் இளைஞரின் உடல் இறுதிக் கிரியைகளுக்காக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.. இளைஞரின் பெற்றோர்கள் கொழும்பில் வாழ்கின்றனர்.

பிரபாகரன் யூன் 25 நடு இரவில் குத்திக் கொலை செய்யப்பட்டார். வடமராட்சி வல்வெட்டி பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞர் சம்பவ தினத்தன்று இல்பேர்ட் லேன், இல்பேர்டில் உள்ள ஷெல் பெற்றோல் நிலைத்தின் போர்க்கோட்டில் வைத்து குத்தப்பட்டு உள்ளார். இவ்வாண்டு இடம்பெற்ற முதலாவது படுகொலைச் சம்பவம் இதுவாகும். இதனுடன் எவ்வகையிலும் தொடர்பற்ற மற்றுமொரு கொலைச் சம்பவம் லூசியத்தில் இடம்பெற்று உள்ளது. கடந்த 10 மாதங்களில் இடம்பெற்ற இரண்டாவது படுகொலை. கடந்த ஆண்டு ஒகஸ்டில் கிங்ஸ்பறியில் கேதீஸ்வரன் சண்முகதாசன் என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே. (14ம் பக்கம் பார்க்க)





# கார் விபத்து தொடர்பாக இன்ரபோலினால் தேடப்பட்ட தமிழ் இளைஞருக்கு இரண்டரை ஆண்டுகள் சிறை



கார் விபத்துத் தொடர்பான விசாரணையில் விபத்துக்கு காரணமான ரட்ணம் யோகன் இலங்கைக்குச் சென்று தலை மறைவாகி இருந்தவர் யூன் மாதம் லண்டன் பொலிஸில் சரணடைந்தார். பிணையில் இருந்த போது தலைமறைவாகியதற்காக ஏற்கனவே அவர் எட்டு மாதங்கள் சிறையிலிடப்பட்டு உள்ளார். தனது ஆபத்தான ஓட்டத்தால் Deborah Peaty (படம்) என்பவரின் மரணத்துக்கு காரணமானதையும் நீதியை திசை திருப்ப முயன்றதையும் ரட்ணம் யோகன் ஒப்புக்கொண்டார். இவரை சதா அன் கோ சொலிசிற்றேஸ் நிறுவனம் பிரதிநிதித்துவம் செய்திருந்தனர். பயத்தின் காரணமாகவே ரட்ணம் யோகன் தலைமறைவானதாக அவர்கள் ஒக்ஸ்போர்ட் கிறவுன் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

கார் விபத்துத் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட ரட்ணம் யோகனும் அவருடன் குற்றம் சுமத்தப்பட்ட புஸ்பராஜா சின்னப்பயல் என்பவரும் தலைமறைவாகி இருந்தனர். இன்ரபோல் ஊடாக ரட்ணம் யோகனை கைது செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஜேர்மன் பொலிசாருடனும் இது விடயமாக தொடர்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

விபத்து :

2003 ஒக்ரோபர் 20 மாலை 4:35 மணி அளவில் டீஆறு காரை ஓட்டிச் சென்ற ரட்ணம் யோகன் மற்றொரு காரை முந்திச் செல்ல முயன்றபோது முந்திச் செல்ல முற்பட்ட காரின் பக்கக் கண்ணாடி உடைந்தது. ஏ5 விதியில் Potterspury என்ற இடத்திற்கு அருகில் இவ்விபத்து இடம்பெற்றது. தனது காரை நிறுத்தி பாதிக்கப்பட்ட காருக்கு நட்ட ஈட்டை வழங்கிவிட்டு ரட்ணம் யோகன் அவ்விடத்தை விட்டு நீங்க முற்பட்டார். இதனால் மற்றுமொரு விபத்து எற்பட்டதை மற்றைய காரின் ஓட்டுனர் குறிப்பிட்ட போதும் ரட்ணம் யோகன் அவ்விடத்தை விட்டுச் சென்றார். அங்கு னுநளவெசல என்ற இடத்தைச் சேர்ந்த Deborah Peaty என்பவரின் சிவப்பு நிற வக்சோல் கார் விபத்துக்கு உள்ளானது. 20 வாரங்கள் கர்ப்பிணியான Deborah Peatyயும் கருவி ல் வளர்ந்த அவருடைய குழந்தை Charlotteஉம் விபத்தில் உயிரிழந்தனர்.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் :

விபத்து தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நோத்தம்ரன் கிறவுன் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட ரட்ணம் யோகன் (28), ராமசாமி நல்லகாந்தன் (28), புஸ்பராஜா சின்னப்பயல் ஆகிய மூவரும் கிழக்கு இலண்டன் மனோபார்க்கைச் சேர்ந்தவர்கள். இந்த மூவரில் ரட்ணம் யோகன் ஆபத்தாக வாகனத்தை ஓட்டி இருவரின் மரணத்துக்கு காரணமானதாக குற்றம்சாட்டப்பட்டு இருந்தது. ரட்ணம் யோகன் உட்பட அவரது சகாக்களான ராமசாமி நல்லகாந்தன், புஸ்பராஜா சின்னப்பயல் ஆகிய மூவரும் நீதியைத் திசை திருப்ப முயன்றதாகக் குற்றம்சாட்டப்பட்டனர். திருமணமான ராமசாமிக்கு ஐந்து மாதக் குழந்தையும் உண்டு. புஸ்பராஜா லெய்ஸ்ரர் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தார். பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரி இருந்த ரட்ணம் யோகனுக்கு விபத்து நடைபெறுவதற்கு அண்மையில் தஞ்சம் வழங்கப்பட்டது. இவர் ஜனவரி 2004ல் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். பிணை வழங்க வேண்டாம் என பொலீசார் தெரிவித்து இருந்த போதும் நீதிபதி சார்ள்ஸ் வைட் பிணை வழங்கி இருந்தார். நிச்சயம் நீதிபதிக்கு எலி யினுடைய மூளை இருந்திருக்க வேண்டும் என Deborah Peaty ன் தந்தை கோபத்துடன் திட்டினார்.

பிணையும் தலைமறைவும் :



ரட்ணம் யோகன் (படம்) 2004 பெப்ரவரி 10ல் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்கவில்லை. இவர் பேர்லின் செல்ல விமானம் ஏறியதாக பொலிஸ் செய்திகள் தெரிவித்தன. இவரது மனைவி குழந்தையுடன் பெப்ரவரி இறுதிப் பகுதியில் இலங்கை சென்றுவிட்டதாக பிபிசி செய்தி வெளியிட்டிருந்தது. இவருடன் குற்றம்சாட்டப்பட்ட புஸ்பராஜா சின்னப்பயல் பெப்ரவரி 10ல் நீதிமன்றத்தில் ஆஜரானார். பொலிஸ் நிலையத்தில் தினமும் வந்து கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையில் புஸ்பராஜா சின்னப்பயலுக்கும் பிணை வழங்கப்பட்டது. ஆனால் இவர் பொலிஸ் நிலையத்திற்கு கையெழுத்திட வரவில்லை.

யோகன் ரட்ணம் தலைமறைவானதை அடுத்து பிணை எடுக்க வழங்கப்பட்ட £11,000 நீதிமன்றத்தினால் சுவீகரிக்கப்பட்டிருந்தது. அவர்களைப் பிணை எடுக்க உதவி செய்த அவர்களின் நண்பர்கள் தங்கநாயகி கமலேந்திரன், இ ராஜ்கண்ணன், இலந்தமுத்து கந்தசாமி ஆகியோர் தமது பணத்தை மீளப்பெற முடியாமல் செய்யப்பட்டது. இவர்கள் மூவரும், பிணையில் சென்றவர்கள் நீதிமன்றத்திற்கு வருவதை உறுதி செய்யத் தவறியதாக நோத்தம்ரன் நீதிமன்ற நீதிபதி றிச்சர்ட் பிரே தெரிவித்திருந்தார்.

ரட்ணம் யோகன் வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப் பத்திரம், காப்புறுதி என்பவற்றை வைத்திருந்தார். மேலும் அவர் விபத்தில் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அவரது ஓட்டத்தின் விளைவால் மற்றுமொரு ஓட்டுனர் வாகனக் கட்டுப்பாட்டை இழந்ததாலேயே விபத்து நிகழ்ந்து உள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் எடுத்தே அவருக்கு இரண்டரை ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது.

## உலகத் தமிழ் அமைப்பும் சென்னை தோசையும்

உலகத் தமிழ் அமைப்பு லண்டன் அறிமுகவிழா மே 1ல் சவுத் விம்பிள்டனில் இடம்பெற்றது. இவ்விழாவில் தென்னிந்திய நடிகர் வினுச்சக்ரவர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்தகொண்டார். மேலும் இசை, நடன நிகழ்ச்சிகளும் சிறப்புரைகளும் இடம்பெற்றது. நிகழ்ச்சிக்குப் பின் சென்னை தோசையின் சைவ, அசைவ உணவுகள் பரிமாறப்பட்டது. தெற்கு லண்டனில் புதி தாக ஆரம்பிக்கப்பட்டு உள்ள இவ் உலகத் தமிழ் அமைப்பு லண்டனின் பின்னணியில் ஈஸ்ற்காம் தமிழ் சங்கத்தின் தலைவரும் சென்னை தோசை உணவகத்தின் உரிமையாளருமான அசோக் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தெற்கு லண்டனில் உலகத் தமிழ் அமைப்பின் ஆரம்பத்துடன் விரைவில் சென்னை தோசையின் கிளை ஒன்றும் ஆரம்பிக்கப்பட உள்ளதாக தெரிய வருகிறது.

**மக்களின் உரிமைகளுக்கு ஆப்பு வைக்கிறது அரசு** 1ம் பக்கத் தொடர்ச்சி

இயற்றுவதிலேயோ அல்லது உள்ள சட்டங்களை கடுமையாக்குவதிலேயோ பெரிய சிக்கல்கள் எதுவும் கிடையாது.

தேர்தலில் பலவீனமான பெரும்பாண்மையுடன் ஆட்சிக்கு வந்த அரசு ஐடி காட் போன்ற விடயங்களில் பெரும்பாண்மையை வென்றெடுப்பதில் சிரமத்தை எதிர்நோக்கி இருந்தது. ஆனால் தற்போது இலகுவாக பெரும்பான்மையை வென்றெடுக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது. மேலும் அரசு தஞ்சம் கோருவோர் மீது பழியைப்போட்டு, சில கடுமையான சட்டங்களை உருவாக்கிவிட்டு பொறுப்பாக நடந்து கொள்வதாக காட்டமுயல்கிறது.


We DISCOUNT our PRICES not our QUALITY
DISCOUNT (CONSTRUCTION) DOUBLE GLAZING
FENSA Registered Company
Over 20 Years Experience
Selling direct to Public
VISIT OUR SHOWROOM and see our VAST RANGE of
QUALITY CONSERVATORIES
Visit our website: www.dconsdgltd.co.uk
Email: bhudia@freeuk.com
Call 020 8514 0819
844 Romford Rd, Manor Park, London E12 5JP

BRIGHT WINDOWS LTD www.brightwindows.co.uk
BRIGHT WINDOWS
Manufacturers, Suppliers & Installers of Double Glazing, UPVC and Aluminium Windows, Doors, Patio Doors & Porches

Trade & Retail Welcome
020 8459 8811
www.brightdoubleglazing.co.uk Fax: 020 8459 8844
202 Church Road, Willesden, London NW10 9NP

V.J.CARPETS Ltd.
Full 3 Bedroom house Carpets
Contact us on
(T) 020 8574 9033
(M) 07958 681 009
110, The Green, Southall, Middx. UB2 4BQ

## முரண்பாடுகளை தீர்த்து மாற்றங்களை ஏற்படுத்தும் புதிய அமைப்பொன்றை ஏற்படுத்த தீவிர முயற்சி



தமிழ் சமூக அமைப்பினால் ஏற்படும் நன்மைகள் மரத்தில் பழங்களாக தொங்கவிடப்பட்டிருப்பதையும் மங்கை சிவதாசன், ருத் முஸ்கிரேவ், சார்ஜோ கமரா, போல் சத்தியநேசன் ஆகியோரையும் படத்தில் காண்கிறீர்கள்.

தமிழ் மக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே காணப்படும் முரண்பாடுகளை சுமுகமாகத் தீர்த்து மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சி நியூகாமில் இடம்பெற்று வருகிறது. முரண்பாடுகளும் மாற்றங்களும் - Conflict & Change என்ற அமைப்பின் அனுசரணையுடன் அமைக்கப்பட உள்ள புதிய அமைப்பின் உருவாக்கத்தில் தமிழ் மக்களின் பல்வேறு மட்டங்களில் இருந்தும் 25க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ் சமூகத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் ஆரம்பத்தில் இனம்காணப்பட்டு அதற்கான தீர்வுகளும் அறியப்பட்டது. இப்பிரச்சினைகள் முரண்பாடுகளைத் தீர்த்து மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஒரு அமைப்பின் தேவையை வலியுறுத்தியது. தற்போது அமைப்பின் உருவாக்கத்திற்கான அடிப்படை அம்சங்கள் பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

இவ்வமைப்பு தமிழ் மக்கள் மத்தியில் உள்ள வளங்களை அதாவது சட்ட உதவி அமைப்புகள், இலவசக் கல்வி அமைப்புகள், வீட்டு வசதி அமைப்புகள், .... போன்ற வெவ்வேறு அமைப்புகளை பயன்படுத்தி புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இளைஞர்களை பயனுள்ள நடவடிக்கையில் ஈடுபடுத்துவது, ...... போன்ற செயற்பாடுகளைச் செய்ய உள்ளது. மேலும் உள்ளுர் மற்றும் அரச நிறுவனங்களையும் எதிர்காலத்தில் ஈடுபடுத்தவும் இவ்வமைப்பு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஈழத்தமிழரின் ஆதிச்சுவடுகள்




டொக்டர் எஸ் தியாகராஜாவின் (படம்) 'ஈழத்தமிழரின் ஆதிச் சுவடுகள்' நூல் ஓகஸ்ட் 13ல் வெளியிடப்பட உள்ளது. விஞ்ஞான பூர்வமாக வரலாற்றை அணுகி உள்ள இந்நூல் லண்டனில் தமிழில் வெளிவந்துள்ள முக்கிய நூல் என்பது குறிப்பிடத்தக்கது. லண்டன் தேசம் சஞ்சிகையிலும் இலங்கை வீரகேசரி வாரமலரிலும் வெளியான கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். தொல்லியல் வரலாற்றுத் துறைகளில் ஆர்வம் கொண்ட எஸ் தியாகராஜா, The Origins and Evolution of Dravidian Civilization என்ற ஆய்வை சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு கலாநிதிப்பட்டம் பெற்றார். இவர் வைத்தியகலாநிதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

"யம்பு கோவளம், யம்புத்துறை என கி மு 6ம் நூற்றாண்டில் அழைக்கப்பட்டு யம்புப் பண்ணை, யாப்பண்ணை என கி பி 9ம் நூற்றாண்டில் மாற்றமடைந்து கி பி 14ம் நூற்றாண்டில் யாப்பாணயன் பட்டினம் ஆகி, கி பி 16ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பட்டினம் ஆகி தற்போது யாழ்ப்பாணம் என்று அழைக்கப்படுகிறது." இவ்வாறு பல்வேறு அரிய வரலாற்று உண்மைகளை தனது ஆய்வுகள் மூலம் இந்நூலில் நிறுவியுள்ளார் நூலாசிரியர்.



முன்னாள் உதவி அரசாங்க அதிபர் த தனபாலசிங்கம் (படம்) தலைமையில் வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத்தில் ஓகஸ்ட் 13, மாலை 2 மணிக்கு நூல்வெளியீடு இடம்பெறவுள்ளது. சுப்பிரமணியம் வசந்தி, மு நித்தியானந்தன், தனா குணபாலசிங்கம், வி சிவலிங்கம் ஆகியோர் 'ஈழத்தமிழரின் ஆதிச் சுவடுகள்' நூல் பற்றி கருத்துரை வழங்க உள்ளனர். ரி சோதிலிங்கம் தேசம் வெளியீடுகள் பற்றிய கருத்துரையை வழங்க உள்ளார். இந்நிகழ்வில் பொது வாசிப்பு, நூலகங்கள், சிறுவர் நூல்கள் பற்றி பாரதி தமிழ் பள்ளி மாணவர்கள் உரையாற்ற உள்ளனர். விழா ஏற்பாட்டாளர்கள் ஆர்வம் உள்ள அனைவரையும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுள்ளனர். தொடர்புகட்கு : 020 8279 0354

## அமீர் 16 ஆண்டுகள்



முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் த.வி.கூ. தலைவருமான அ அமிர்தலிங்கத்தின் (அமீர்) 16வது ஆண்டு நினைவுதினம் கனடாவில் உள்ள றிச்சமன்ட் ஹில் ஆலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வையொட்டி உதய சூரியன் பத்திரிகையும் வெளியிடப்பட்டது. இவ்விதழ் அமீர் சிறப்பிதழாக வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்பத்திரிகை கதிர்காமநாதன், நடராஜா போன்றவர்களால் கனடாவில் சட்டபூர்வமாக பதிவுசெய்யப்பட்டு வெளியிடப்படுகிறது.

“எனது கணவரை புலிகள் கொன்றார்கள். ஏன் கொன்றார்கள் என்று இதுவரை சொல்லவில்லை. அவர் செய்த துரோகம் என்ன? தம்பி பிரபாகரனை கேட்கிறேன். வீட்டுக்கு வந்து எத்தனை தடவை எனது கையால் சாப்பாடு வாங்கி சாப்பிட்டிருக்கிறார். எப்படிக் கொலை செய்ய மனம் வந்தது. பிரபாகரன் தனக்கு இந்தியத் தலைவர்களை அறிமுகம் செய்து வைக்கும்படி கேட்டார். உடனே என் கணவரும் செய்து கொடுத்தார். அதற்குரிய பரி சா இந்தக் கொலை? கொலை செய்வதற்கு முன் ஒரு வார்த்தை சொல்லி அனுப்பி இருந்தால் நாம் பேசாமல் ஒதுங்கி இருப்போம்.” இவ்வாறு ஏப்ரல் 10, 2004ல் ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் நூல் வெளியீட்டுவிழாவில் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் கணவரின் கொலை தொடர்பாக குறிப்பிட்டார்.

## அம்பாளா ‘சுவீற்’ பணியாளருக்கு வழங்கும் ‘ஹொட்’ கறி


ஆசியர்கள் பெரும்பாண்மையாக வாழும் எல்லா இடங்களிலும் இருக்கும் அம்பாளா சுவீற்ஸ் உரிமையாளருக்கும் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் அண்மையில் கடும் மோதல் நிகழ்ந்துள்ளது. அனைத்துக் கடைகளுக்கும் சுவீற்ஸ் வழங்கப்படுவது ஸ்ரட்போட் இல் இருக்கும் அவர்களின் தலைமை தொழிற்சாலையில் இருந்து தான். இங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இதன் உரிமையாளர் அடிமட்ட சம்பளம் வழங்கி வந்தது மட்டுமின்றி அளவுக்கதிகமான நேரத்திற்கு அவர்களை வேலை செய்யும்படி நிர்ப்பந்தித்தும் வந்துள்ளார். இதனால் அதிருப்தியான தொழிலாளர்கள் பல மாதங்களாக கிழமைக்கு இரு நாள் பகிஸ்கரிப்பை நடத்தி வருகிறார்கள்.

எங்களை எவ்வளவு கேவலப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு உரிமையாளர் கேவலப்படுத்தி வருவதாக அசாத் என்ற தொழிலாளி தெரிவித்தார். டெலிவரி செய்யும் வானால் ஒருவருக்கு இடித்துப் போட்டு




வானை உடைத்துப்போட்டார் என்று அவருக்கு எதிராக பொலிசில் புகார் கொடுத்ததும்; அவர்களுக்கு காசு தருவதாக பொய் சொல்லிக் கூப்பிட்டு மேலும் வேலை வாங்கியதும் என்று பல்வேறு கேவலமான நடவடிக்கைகளில் அம்பாளா உரிமையாளர் இறங்கியுள்ளதாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

லட்சக்கணக்கான பெறுமதி வாய்ந்த வீட்டில் வசிப்பவரும் ஆயிரக்கணக்கான பெறுமதி வாய்ந்த கார்களில் திரிபவருமான இந்த உரிமையாளர் இவர்களின் கோரிக்கைகளுக்கு உடன்படுவாரா என்பது சந்தேகமே. என்றாலும் கூட இவர்கள் தொடர்ந்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.




PORTICO
WORLD OF FURNITURE

Looking for cheap & quality furniture?
Then Look No Further

3 Piece suite
FROM £180.00

Pine Single bed
FROM £35.00

Pine Double Bed
FROM £65.00

Dining Table +
4 Chairs
FROM £99.00

Set of 3 Tea Tables
FROM £15.00

Chair
FROM £15.00

10 - 12 Beresford Avenue, Wembley,
Middlesex HA0 1YP
Tel: 020 8795 5515
Fax: 020 8795 5514
Email: furniture@portico.co.uk

## புதுவையின் மகளுக்கு லண்டனில் திருமணம்

வி.புலிகளின் ஆஸ்தான கவிஞரான புதுவை இரத்தினதுரையின் மகளின் திருமணம் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் யூலை 13ல் வெகுசிறப்பாக நடைபெற்றது. கவிஞரின் மகள் மல்லிகா - பார்த்தீபன் தம்பதிகளின் இத்திருமணத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய சர்வதேச உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவித்தனர். புதுவையின் மூன்று பிள்ளைகளில் ஒரே மகளான மல்லிகா 2000 ஆண்டில் லண்டனுக்கு புலம்பெயர்ந்தார்.


அண்மையில் பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்ட கவிஞர் புதுவை மீண்டும் யுத்தத்திற்கு தயாராக வேண்டியதன் அவசியத்தை அண்மைக்காலமாக வலியுறுத்தி வருகிறார்.



கவிஞர் புதுவை ரத்தினதுரை

# நீதிமன்றம் ஏறி இறங்கி களைப்படைகிறார் ஈலிங் அம்பாள்

2005 - 2007 நிர்வாக சபைத் தேர்தல் தொடர்பான இழுபறி நீதிமன்றம் வரை சென்றுள்ளது. கருணலிங்கம் தலைமையிலான நிர்வாக சபையின் செயற்பாடுகளை சிவகுரு பிரேமச்சந்திரன் தலைமையிலான அறங்காவல் சபை நீதிமன்ற உத்தரவின் மூலம் முடக்கியதையடுத்தே இந்நிலையேற்பட்டு உள்ளது. தேர்தல் வாக்காளர் பட்டியலில் எதிரணிக்கு சார்பான மாற்றங்களை ஏற்படுத்தி கருணலிங்கம் தலைமையிலான செயற்குழுவை திட்டமிட்டு வெளியேற்றவே அறங்காவல் சபை இத்தலையீட்டை மேற்கொண்டுள்ளதாக அறங்காவல் சபை மீது குற்றம் சாட்டப்படுகிறது. ஆனால் "இந்த நிர்வாகசபை செய்து வந்த நாளாந்த நிர்வாகத்தில் எந்த முறையிலாவது மாற்றங்கள் செய்யவோ, எதிர்காலத்தில் அதில் தலையீடு செய்வதற்கோ எந்த ஒளிவு மறைவான திட்டமும் தங்களுக்கு இல்லை" என அறங்காவல் சபைத் தலைவர் பிரேமச்சந்திரன் தெரிவிக்கிறார்.



சிறுவர் இல்ல சிறுமிகளுடன் கலந்துரையாடுகிறார் கருணலிங்கம்

ஈலிங் அம்மன் ஆலய நிர்வாகம் :

ஈலிங் அம்மன் ஆலயம் இரு சபைகளைக் கொண்டு இயங்குகிறது. ஒன்று அறங்காவல் சபை. மற்றையது நிர்வாக சபை. அறங்காவல் சபையில் ஆலயத்தின் ஆரம்பகால உறுப்பினர்கள் அங்கம் வக்கிக்கின்றனர். இவர்கள் அடியார்களால் தெரிவு செய்யப்படுவதில்லை. இவர்கள் ஆலயத்தின் நாளாந்த நிர்வாகத்திலும் தலையிடமுடியாது. மாறாக நிர்வாக சபை அடியார்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படுகிறது. நிர்வாக சபையே ஆலயத்தின் நாளாந்த செயற்பாடுகளுக்கு பொறுப்புடையதாக உள்ளது.

போட்டியின் பின்னணி :

கருணலிங்கத்தினுடைய காலத்தில் அதிக வருமானம் வருகின்ற ஒரு ஆலயமாக ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயம் மாறி உள்ளது. அதனை அடுத்து ஆலயத்தின் நிர்வாக சபைத் தலைமை பொறுப்புக்கான போட்டியும் அதிகரித்தது. தற்போது முடக்கி வைக்கப்பட்டுள்ள கருணலிங்கம் தலைமையிலான நிர்வாகமே ஆலயத்தின் வருமானத்தில் ஒரு பகுதி தாயகத்து மக்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டு வந்து தாயகத்தில் பல புனர்வாழ்வுத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகின்றது. அதனால் தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகள் தனது தலைமைப் பதவியையும் கருணலிங்கம் தக்க வைத்துக் கொண்டுள்ளார். ஆலயத்தின் இந்த வளர்ச்சியை தொடர்ந்தும் பாதுகாக்கக் கூடிய ஒருவர் மிக்க சிரமத்தின் மத்தியில் பெற்ற இந்த வளர்ச்சியை சாதாரணமாக ஒப்படைக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

தேர்தல் பட்டியல் :

ஆலயத்தின் ஆண்டுச் சந்தா 36 பவுண்களை செலுத்திய உறுப்பினர்களே வாக்களிக்க முடியும் என எதிரணி தெரிவிக்கின்றது. அவ்வாறு சந்தா செலுத்தியவர்கள் 125 பேர் வரையே இருப்பார்கள். ஆனால் பல்வேறு காரணங்களாலும் முழுமையான சந்தாவை செலுத்தாமல் ஒரு சிறுபகுதி சந்தாவைச் செலுத்தி உள்ளவர்களின் எண்ணிக்கை 600க்கும் அதிகமாக உள்ளது. அங்கத்தவர்கள் சுனாமிக்கு வாரி வழங்கி இருந்ததால் அவர்களிடம் மீண்டும் பணத்தைக் கேட்டு அழுத்தம் கொடுப்பது அழகல்ல என்றும் அதனால் சந்தாவில் ஒரு பகுதியைச் செலுத்தியவர்களையும் வாக்களிக்க அனுமதிப்பது என நிர்வாக சபை முடிவு செய்தது.

சந்தாவில் ஒரு பகுதியை செலுத்தியவர்கள் பெரும்பாலும் கருணலிங்கத்துக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என அஞ்சுவதால் அவர்களை வாக்களிப்பதில் இருந்து நீக்கிவிட எதிரணி முயற்சிக்கின்றது.

தேர்தல் குழப்பங்கள் :

நிர்வாகசபைக்கான தேர்தல் மார்ச் 27, ஏப்ரல் 10, மே 15 க்களில் நடாத்த திட்டமிடப்பட்டிருந்த போதும் அடுத்தடுத்து வந்த நீதிமன்ற உத்தரவுகளை அடுத்து ஒத்தி வைக்கப்பட்டது. அதில் கருணலிங்கம் தலைமையிலான நிர்வாக சபையே மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தது. அதனால் எதிரணியில் போட்டியிட்ட ரி யோகநாதன், எஸ் இராமச்சந்திரன், திருமதி எஸ் ஜெயம், செல்வி லீலா பொன்னையா, திருமதி எஸ் சங்கரலிங்கம் ஆகியோர் நீதிமன்றம் சென்று வாக்காளர் பட்டியல் மற்றும் போட்டியாளர்கள் பற்றிய தமது அதிருப்தியை வெளியிட்டு தேர்தலை இடைநிறுத்தினர். அதனை அடுத்து தேர்தல் குழு வாக்காளர் பட்டியலையும், வேட்பாளர்களின் தகுதிகளையும் ஆராய்ந்தது. ஆனால் இத்தேர்தல் குழு மீது மே 8ல் கூடிய பொதுக்குழு நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்து நிறைவேற்றியது. இது மற்றுமொரு நீதிமன்ற வழக்குக்கு இட்டுச் சென்றது. இன்னமும் வழக்கு விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## விடுதலைக்கு இடைக்காலத் தடை

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட லிங்கம், வசந்தன் என்ற இரு இலங்கைத் தமிழர்களையும் விடுவிக்க சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு புதுடெல்லியில் உள்ள உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்து உள்ளது. இவிருவரும் ராஜீவ் கொலை வழக்கில் ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்ட 21 பேரில் அடங்கியிருக்கவில்லை.

சிபிஐ தாக்கல் செய்த மனுவை அடுத்தே இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. முறையான ஆவணங்கள் இன்றி இந்தியாவுக்குள் நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் செங்கல்பட்டு 'சிறப்பு முகாமில்' தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

### ராஜீவ் படுகொலை ஆவணப்படம்

ராஜீவ்காந்தியின் கொலை தொடர்பான ஆவணப்படத்தை சி.பி.ஐ.யின் முன்னாள் அதிகாரியான எஸ்.பி.ரகோத்தமன் என்பவர் தயாரித்துள்ளார். 60நிமிடம் நீளமான இவ்ஆவணப் படத்தை தயாரிக்க 4 ஆண்டுகள் எடுத்து உள்ளதாக அவர் தெரிவிக்கிறார். இப்படத்தில் ராஜீவ் கடைசியாக ஸ்ரீபெரும்புதூரில் கலந்துகொண்ட நிகழ்ச்சியும் படுகொலையும் பதிவாகியுள்ளது. தனு, சிவராசன் இலங்கையில் பயிற்சி பெறுவது, பெங்களூரில் தற்கொலை செய்து கொண்டது என்பன இவ்ஆவணப்படத்தில் இடம்பெறுகிறது. பிரபாவின் பேட்டியும் இணைக்கப்பட்டுள்ளது.

## சாமியை ஆட்டுவிக்கும் ஆசாமிகள்

3ம் பக்கத் தொடர்ச்சி

சூரியோதயத்தை மையமாக வைத்து கணிக்கப்படுகிறது. மற்றையது சந்திரோதயத்தை மையமாக வைத்து கணிக்கப்படுகிறது. இந்த இரு கணிப்புகளுக்கிடையேயான வித்தியாசம் ஒரு சில மணி நேரங்களே. பல ஆண்டுகளுக்கு ஒரு தடவை இந்த சில மணிநேர வித்தியாசம் நடுநிசியில் ஏற்படும் பட்சத்தில் அவை இரு வெவ்வேறு நாட்களாகக் கணிக்கப்படும். இதற்கான சாத்தியம் மிக அரிது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து இந்த தினங்கள் வெவ்வேறு நாட்களாக அமைகிறது. ஏன் ? இது மிகவும் சுவாரஸ்யமானது.


இந்த நாட்காட்டிகளின் பின்னால் தான் இந்த தினங்கள் வேறுபடுவதற்கான காரணம் மறைந்து உள்ளது. ஆரம்பத்தில் வாக்கிய பஞ்சாங்கமே ஆலயங்களால் கடைப்பிடிக்கப்பட்டது. சைவத்திருக்கோயில் ஒன்றியமும் (விம்பிள்டன் பிள்ளையார் கோயில், இலண்டன் சிவன் கோயில், கனகதுர்க்கை அம்மன் கோயில், ஸ்ரோன்லி அம்மன் கோயில், ஆச்சுவே முருகன் கோயில் இவற்றின் கூட்டு. ஆரம்பத்தில் ரூற்றிங் முத்துமாரி அம்மன் கோவிலும் ஒன்றியத்தில் இருந்தது.) ஆரம்பத்தில் வாக்கிய பஞ்சாங்கத்தையே பின்பற்றியது. வாக்கிய பஞ்சாங்கம் கனடாவில் வாழும் தமிழகத்தைச் சேர்ந்த கௌசிகர் என்பவரால் தயாரிக்கப்படுகிறது.

சீவரத்தினம் V சச்சிதானந்தன் :

ஒன்றியத்தில் அங்கமாக இருந்த போதும் வாக்கிய பஞ்சாங்கத்தின்




பதிப்புரிமையை ரூற்றிங் முத்துமாரி அம்மன் ஆலயத் தலைவர் சீவரத்தினம் பெற்றுக்கொண்ட போது சர்ச்சை எழுந்தது. ஒன்றியத்தின் மற்றுமொரு ஆலயமான லூசியம் சிவன் கோவில் தலைவர் என் சச்சிதானந்தனுக்கு பதிப்புரிமை மறுக்கப்பட்டது. ஒன்றியம் நாட்காட்டியின் பதிப்புரிமைக்கு சீவரத்தினத்துக்கு பணம் வழங்க வேண்டி இருந்ததுடன் அவரின் தயவிற்கு காத்திருக்க வேண்டியிருந்தது. அதனால் ஒன்றியத்தினர் திருக்கணித பஞ்சாங்கத்துக்கு மாறினர். அது முதல் லண்டனில் இரு வேறு நாட்காட்டிகள் பாவனைக்கு வந்தன. மக்கள் குழப்பப்பட்டனர். ரூற்றிங் முத்துமாரி அம்மன் கோவில் ஒன்றியத்தில் இருந்து வெளியேறியது. அதைவிடவும் ஈஸ்ற்காம் முருகன் கோயில் நாக நாதக் குருக்களின் (படம்) நாட்காட்டியை பின்பற்றுகிறது. அந்த நாட்காட்டி அவருக்குத்தான் வெளிச்சம் என்கிறார் சைவ அடியார் ஒருவர்.



சைவத் திருக்கோயில் ஒன்றியம் திருக்கணித பஞ்சாங்கத்தை நிலைநாட்டும் தமது நிலைப்பாட்டை விளக்க இம்முறை சைவ மாநாட்டுக்கு மட்டுவிலைச் சேர்ந்த சிதம்பரநாத ஜெகதீஸ்வர சர்மாவை வரவழைக்க உள்ளனர். தமிழ் சைவர்களைக் குழப்பும் நாட்காட்டிப் பிரச்சினை தற்போதைக்கு தீரப் போவதில்லை என்பதையே நிகழ்வுகள் தெரிவிக்கின்றன.

எந்த நாட்காட்டி ?

ஆலயங்கள் வாக்கிய பஞ்சாங்கத்தையோ அல்லது திருக்கணித பஞ்சாங்கத்தையோ பின்பற்றுவதன் நோக்கம் அவற்றின் மீது கொண்ட நம்பிக்கையல்ல. ஓரளவு வளர்ந்த பெரிய ஆலயங்கள் சீவரத்தினத்துக்கு நட்பாக இருந்தால் வாக்கிய பஞ்சாங்கத்தையும் சச்சிதானந்தம் அல்லது ஒன்றியத்தின் மற்றைய கோயில் தலைவர்கள் நட்பாக இருந்தால் திருக்கணித பஞ்சாங்கத்தையும் பின்பற்றுகின்றன. வோல்தம்ஸ்ரோ பிள்ளையார் கோயிலை எடுத்துக் கொண்டால் அவர்கள் வாக்கிய பஞ்சாங்கத்தை பின்பற்றுகின்றனர். அதற்கு காரணம் அவர்கள் சீவரத்தினத்தின் நண்பர்கள் என்பதல்ல. வாக்கிய பஞ்சாங்கத்தின்படி நல்ல தினங்கள் யாவும் ஈஸ்ற்காம் முருகன் கோயிலின் தினத்துக்கு முதல்நாளே வந்துவிடுவதாகும். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கோயில்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பெரிய கோயில்களின் அதே தினத்தில் அல்லது அதற்கு முதல்நாள் நல்ல தினங்களை கொண்டாட விரும்புகின்றன. அதன் மூலம் அவ்வாலயங்களது வருமானம் பாதிக்கப்படாமல் இருக்கும்.



சீவரத்தினம், சச்சிதானந்தன் போன்ற ஆசாமிகளே லண்டனில் உள்ள சாமிகளை ஆட்டிப்படைக்கின்றனர். இவர்கள் இருவருக்கிடையேயும் சமரசம் செய்து லண்டன் வாழ் தமிழர்களைக் குழப்பாமல் ஒரு நாட்காட்டியை பின்பற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள் எதுவும் இதுவரை பலனளிக்கவில்லை. இவர்கள்

( தொடர்ச்சி 10ம் பக். )

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
Unit 4, Bitten Place, Coburg Road, Wood Green London N22 6TP

Panesar Electrical Co.
EST 1981
- Wylex 9 Way Split Load
- RCD+Main Switch
- 9 MCBs
ONLY £65
- Lux 10 Way Split Load
- RCD+Main Switch
- 10 MCBs
ONLY £55
- 2Gang 13a Sockets from £0.95
- 4 Inch Timer Fans from £9.95
- 2Gang 13a Chrome Socket from £5
- 9 Inch Pendants from £0.95
More Quality Offers In Store
362 - 364 High Street, North Manor Park, London E12 6PH
Tel: 020 8472 1873 Fax: 020 8471 6271

3ம் பக்கத் தொடர்ச்சி

## லண்டனின் குண்டு வெடிப்பில் உயிரிழந்த தமிழ் மகளுக்கு அஞ்சலி




கென்சல் றைஸில் உள்ள தனது வீட்டில் இருந்து புறப்பட்ட சயனுஜா அண்டகிரவுண்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அவரால் நொதேர்ன் லைனை எடுக்க முடியவில்லை. அதனால் அவர் ழே 30 பஸ்ஸில் ஏறிக்கொண்டார். அன்று லண்டன் அண்டகிரவுண்டில் ஏற்பட்ட விபரீதத்தை அறியாத பயணிகளில் ஒருவராக சயனுஜாவும் பயணித்தார். தற்கொலையாளியும் அதே பஸ்ஸில் ஏறியிருக்கும் சாத்தியத்தை அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. ரவிஸ்ரொக் பிளேசில் காலை 10:30 மணியளவில் குண்டு வெடித்தது. பஸ் மேல் தட்டு தூக்கி எறியப்பட்டது. சயனுஜா உட்பட 14 பயணிகள் உயிர் பிழைக்கும் அதிஸ்டத்தை பெற்றிருக்கவில்லை.

காலை 10:30க்குப் பின்னரே அன்று காலை லண்டனின் போக்குவரத்தில் நிகழ்ந்த விபரீதம் தெரியவந்தது. ஆனால் முழுமையான இழப்பு விபரங்கள் இருவாரங்கள் (யூலை 19) ஆகியும் தெரியவரவில்லை. சயனுஜாவிற்கு என்ன நடந்தது என்பதை அறிய உறவுகள் துடித்தன. லண்டனில் காயப்பட்டவர்கள் அனுமதிக்கப்பட்ட 10க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளுக்கு உறவினர்கள் ஏறி இறங்கினர். சயனுஜாவை கண்டீர்களா என்பதை கேட்டு அவரது புகைப்படங்கள் வைக்கப்பட்டது. சயனுஜாவின் மைத்துனி ஸ்ஹை ரிவியில் தோண்றி உருக்கமான வேண்டுகோளைவிட்டார். சம்பவம் இடம்பெற்று ஐந்து நாட்களின் பின் சயனுஜாவின் உறவுகளின் மோசமான அந்தப் பயம் உறுதியானது. ழே 30 பஸ்ஸில் பயணித்தவர்களில் சயனுஜாவும் ஒருவர் என்பது டிஎன்ஏ பரிசாதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டது. உடல் சிதைவடைந்ததால் அவரது புதவுடலை பார்க்க யாரும் அனுமதிக்கப்படவில்லை.

எல்லோருக்கும் விடிந்த காலை போலவே சயனுஜா குடும்பத்தினரதும் யூலை 7 காலை மலர்ந்தது. ஆனால் சயனுஜா குடும்பத்தினரது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு காலையாக அது அமைந்துவிட்டது. சயனுஜாவின் இறுதி அஞ்சலியில் கலந்துகொள்ள உலகின் வெவ்வேறு பாகங்களில் இருந்தும் உறவினர்கள் பறந்து வந்தனர். சயனுஜா தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியின் பெறாமகள் என்பது குறிப்பிடத்தக்கது. இறுதி அஞ்சலியில் ஆனந்தசங்கரியும் கலந்துகொண்டார்.

இக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்கள் 2012ல் நடக்க இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளிலும் நினைவு கூரப்படுவார்கள் அவர்கள் என்றும் மறக்கப்பட மாட்டார்கள் என குண்டு வெடிப்பு நிகழ்ந்து ஒரு வாரத்தின் பின் இடம்பெற்ற நினைவு கூரலில் லண்டன் மேயர் கென் லிவிங்ஸ்டன் நிகழ்த்திய உருக்கமான உரையில் குறிப்பிட்டார்.



சயனுஜா பரதசங்கரி கொல்லப்பட்டதும் பவிசன் விஜயேந்திரன் கடுமையாகக் காயம் அடைந்ததும் இந்த No 30 ல். தான்

## குண்டுவெடிப்பில் காயமடைந்த இளைஞர் குணமடைகிறார்

இக்குண்டு வெடிப்பில் தமிழ் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். சயனுஜா பயணித்த அதே No 30 பஸ்ஸில் பயணித்த பவிசன் விஜயேந்திரன் என்பவரே கடுமையாக காயமடைந்தவராவார். கிழக்கு லண்டன் இல்பேட்டைச் சேர்ந்த இவ்விளைஞர் இச்செய்தி எழுதப்படும் வரை சென்தோமஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். குண்டு வெடிப்பு நிகழ்ந்தவுடன் அருகில் இருந்த பிரித்தானிய மருத்துவ அமைப்பில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட மருத்துவர்கள் உடனடியாக வந்து முதலுதவியில் ஈடுபட்டதை நன்றியுடன் கூறினார் பவிசனின் தந்தை விஜயேந்திரன்.

சில தமிழ் ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு தம்மை மிகவும் காயப்படுத்தியதாக தந்தை விஜயேந்திரன் குறிப்பிட்டார். தனது மகன் கடுமையான காயங்களுக்கு இலக்கானார். அவர் விரைவில் குணமடைந்து விடவேண்டும் என்பதே எமது குடும்பத்தின் விருப்பம் என்று தெரிவித்த அவர் தனது மகன் அங்கங்களை இழந்ததாக சில தமிழ் ஊடகங்கள் தவறான செய்திகளை வெளியிட்டதை வேதனையுடன் கண்டித்தார்.

ஆனால் அம்புலன்சில் கொண்டு செல்லப்பட்டு மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட பின் குறிப்பாக எந்த ஒத்துழைப்போ ஒத்தாசையோ வழங்கப்படவில்லையென விஜயேந்திரன் குடும்பத்தினர் அதிருப்தி தெரிவிக்கின்றனர். மருத்துவமனையில் உள்ள தனது மகனை பார்க்கச் செல்லும் தந்தை கொன்ஜஸ்சன் சார்ஜ் செலுத்தியே பயணிக்க வேண்டி உள்ளது என்றும் அரசோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களோ எந்த உதவியும் வழங்கவில்லை என்றும் தெரியவருகிறது.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களுக்கும் காயப்பட்டவர்களுக்கும் பாரபட்சமின்றி அரசு நிதி உதவிகளை வழங்க வேண்டும் என்று நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் தெரிவித்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக £10 மில்லியன் பவுண்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

## லண்டன் குண்டு வெடிப்புகள் இலங்கையில் குண்டு வெடிப்புகளைத் தடுக்கும்

1ம் பக்கத் தொடர்ச்சி

இருப்பினும் இலங்கையில் இன்னுமொரு யுத்தத்தை ஆரம்பிக்கும் பலம் இருதரப்பிலும் இல்லை. அதையும் மீறி இலங்கையில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் சர்வதேச அழுத்தங்கள் உடனடியாக அதனை முடிவுக்கு கொண்டுவரும். யுத்தத்தை ஆரம்பிக்கும் தரப்பு கடுமையான பாதிப்பை எதிர்கொள்ளும்.

ஜனாதிபதி சந்திரிகா அரசு யுத்தத்தை ஆரம்பித்தால் பொருளாதார நெருக்கடிகள் வழங்கப்பட்டு அவரின் ஆட்சி கவிழும் அபாயம் உண்டு. மறுமுனையில் வி.புலிகள் யுத்தத்தை ஆரம்பித்தால் அமெரிக்கா, பிரித்தானியாவில் மட்டுமல்ல ஐரோப்பிய ஒன்றியத்திலும் விடுதலைப் புலிகள் தடைசெய்யப்படும் அபாயம் ஏற்படும். வி.புலிகளின் சர்வதேசப் பணப் புழக்கங்கள் முடக்கப்படும் லண்டனில் வி.புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் இருப்பே கேள்விக்குள்ளாகும். மேலாக விடுதலைப் புலிகள் ஒட்டுமொத்தமாக அன்னியப்படுவதுடன் அவர்களுக்குள் மற்றுமொரு பிளவும் ஏற்படலாம் என அரசியல் அவதானிகள் எதிர்வு கூறுகின்றனர்.

துப்பாக்கிச் சூடுகளும், படுகொலைகளும் நிறுத்தப்படுவதற்கான எந்த சமிஞ்சையும் கணப்படாவிட்டாலும் முழு அளவிலான யுத்தம் ஒன்று ஏற்படாது என்றே அரசியல் அவதானிகள் கணிக்கின்றனர்.

## தமிழருக்கு மருத்துவ விருது

வெஸ்ற்மினிஸ்ரர் மனநல மருத்துவப் பிரிவின் தலைவர் கொலின் கொன்ஸ்ரன்ரைன் லண்டனின் சுகாதார சமூக சேவைக்கான விருதை வென்று உள்ளார். ஓராண்டுக்கு முன்னர் வெஸ்ற்மினிஸ்ரர் மனநலமருத்துவப் பிரிவின் தலைவராக பொறுப்பேற்ற கொலின் பல்வேறு திறமை மிக்க மாற்றங்களை கொண்டு வந்ததால் அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டு உள்ளது. நோயாளி களும் அவர்களது ஆலோசணை நிபுணர்களும் சேவைகளை வழங்கும் இணைப்பாளர்களும் பயன்படுத்தும் வகையில் பயன்படுத்த இலகு வான சமூகக்கட்டமைப்பை உருவாக்கியது, இரு rehabilitation units உருவாக்கியது, புதிய day-hospital என்பன கொலினின் குறிப்பிடத்தக்க முயற்சிகள். மேலும் வெஸ்ற்மினிஸ்ரர் பகுதியில் உள்ள சகல மக்களையும் அடையும் வகையில் வெளிக்கள மனநல குழு உருவாக்கப்பட்டது. அத்துடன் வெஸ்ற்மினிஸ்ரர் பகுதியில் முழு மக்களுக்கும் சேவை வழங்கக்கூடிய இரு பிரச்சினைத்தீர்வுக் குழுக்கள் உருவாக்கப்பட்டதிலும் கொலினின் பங்கு குறிப்பிடத்தக்கது.

மெற்றோ பொலிட்டன் பொலிஸ் சேவைகள், கற்கை குன்றிய சேவைகள், வயோதிபர்களுக்கான, சிறுவர்களுக்கான, குடும்பங்களுக்கான சேவைகள், மற்றும் இருப்பிடம் வழங்கல் என பரந்துபட்ட நிறுவனங்களுடனும் சேவை அமைப்புகளுடனும் நெருங்கிய உறவை ஏற்படுத்தி பணியாற்றுவதில் கொலின் கொலினின் பங்களிப்பு பாராட்டப்பட்டு உள்ளது.

கொலினின் இம்முயற்சியால் இன்று வெஸ்ற்மினிஸ்ரரில் தரமான சேவைகள் நாளின் எந்நேரமும் வழங்கப்படுவதாக வெஸ்ற்மினிஸ்ரர் சுகாதாரப் பிரிவுச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. புனர்வாழ்வுச் சேவைகள், வெளிக்கள சேவைகள், தினக் கவனிப்பு, பிரச்சினைத் தீர்வு என பல தரமான சேவைகள் மக்களுக்கு கிடைக்க வழி செய்யப்பட்டு உள்ளது. இதன் மூலம் அப்பகுதி மக்களின் வாழ்நிலைத் தரத்தை கொலின் உயர்த்தி உள்ளார்.

யாழ் பண்டத்தரிப்பைச் சேர்ந்த இவர் நீண்டகாலமாக பிரித்தானியாவில் வாழ்கிறார். இவரது சகோதரர்கள் மருத்துவம், கணக்கியல், எழுத்துத்துறைகளில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் போராட்டங்கள் பின்னடைவு

1ம் பக்கத் தொடர்ச்சி

விடுதலைப் புலிகளின் தமிழீழ விடுதலைப் போராட்டம் என சர்வதேச அள வில் இடம்பெற்ற போராட்டங்கள் அனைத்துக்கும் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டுள்ளது.

இதற்கு மத்தியில் ஐஆர்ஏ ஆயுதப் போராட்டத்தை கைவிடுவதாக அறிவித்துள்ளது. தனது 30 வருட ஆயுதப் போராட்டத்தை கைவிட்டதான அறிவிப்பை லண்டன் குண்டுவெடிப்புகளுக்குப் பின் ஐஆர்ஏ அறிவித்தது. லண்டன் குண்டு வெடிப்புடன் இவ் அறிவிப்பு சம்பந்தப்படாவிட்டாலும் அறிவிப்பு வெளியிடப்பட்ட காலம் முக்கியமானது.

விடுதலைப் போராட்டங்கள் மீதான சர்வதேச அழுத்தம் ஒடுக்குமுறை அரசுகளின் மீது அழுத்தங்களைக் கொடுக்கத் தவறியுள்ளது. அமெரிக்க, மற்றும் பிரித்தானிய அரசுகள் தமதும் தம்மைச் சார்ந்த அரசுகளினதும் அரச பயங்கரவாதம் பற்றி தொடர்ந்தும் மௌனமாகவே உள்ளன. ஒடுக்கு முறைக்கு இவர்கள் blank cheque எடுத்துள்ளனர்.



**Khosla & Co.**
Chartered Certified Accountants

For your Accounting and Taxation needs
Call
Tel: 020 8548 8899
Fax: 020 8548 8846

412 Katherine Road
London E7 8NP

Financial Services
- Personal Accounts
- Sole Proprietorships, Partnership Businesses & Solicitors Accounts
- Company Accounts
- Project Reports & Management Information
- Budgets & Corporate Plans

Esther Abayasekara – ACMA
21 years experience in several industries
Tel: - 020 8952 8606
Mobile: – 07837 956 182
Fax: – 020 8952 9606
Email: esther_abay@yahoo.co.uk
Grosvenor House, 3rd Floor
1 High Street, Edgware, Middlesex, HA8 7TA

**Manu Travels**

QATAR AIRWAYS
VALID FROM 10JAN-20MAR
£290+taxes
BOMBAY
VALID FROM 07JAN-20MAR
Island Travel
£335+taxes
TRIVANDRUM, KOCHI
HYDERABAD
MUSCAT / BAHRAIN / ABU DHABI / KUWAIT
£205+taxes
KUALA LUMPUR / MANILA
£360+taxes
SHANGHAI / BEIJING
£330+taxes
SriLankan £360+taxes
CALICUT / TRICHI / HYDERABAD / TRIVANDRUM
KOCHI / MADRAS / BOMBAY / DELHI
Manu Travels 306-308 High Street North, Manor Park, London E12 6SA
Tel: 020 8471 1919 Fax: 020 8471 4333

**Bexley Funral Service**
"South East London's Only Independant Asian Funeral Director"
Private Viewing and Washing chapels
Home arrangements
Ritual Service items Provided
Priest arranged on your behalf
Saturday & Sunday Funerals
Bina, Jyoti or Amarshi Patel
Tel: 020 8303 1274
24 HOUR SERVICE
165 Blendon Road, Bexley
Owned by the Patel Vadodaria Family

**INDIAN FUNERAL DIRECTORS**
We now operate from our new, modern & fully equipped premises on Mollison Way, Edgware.
Our comprehensive service includes:-
- Large prayer room (Mandir) for performing the last funeral rites or for paying the last respects
- All religious rites, ceremonies and wishes respected and administered
- Modern, fully equipped washing & dressing facilities
- Funeral ceremony items provided

Tel: 020 8952 5252
SANJAY or BHARAT SHAH (formerly of Kenton Road)
44 South Parade, Mollison Way, Edgware, Middlesex HA8 5QL.
MOBILE: 0777 030 66 44

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

MASSIVE SALE




MASSIVE SALE

ELITE TILES are undeniably UK's No.1 Importers, Distributors, Wholesalers and Retailers of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




**£2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR**

(collect same day)

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway, West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm - Sat 10am-5pm - Sun 10am - 2pm

# லண்டனில் ஐரோப்பிய தமிழ்ப் பெண்களின் சந்திப்பு

15 வருடங்களைப் பூர்த்தி செய்கின்ற பெண்கள் சந்திப்பு இம்முறை லண்டனில் நடைபெறவுள்ளது. புகலிடத்தில் வாழும் பெண்கள் சந்தித்து தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக்கொள்ளும் முகமாக ஐரோப்பாவில் வெவ்வேறு பாகங்களில் நடைபெற்று வரும் பெண்கள் சந்திப்பின் 24வது தொடர் லண்டனில் ஒக்ரோபர் மாதம் 15, 16ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

1990ம் முதல் இச்சந்திப்பு கடந்த பதினைந்து வருடங்களாக பல நாடுகளிலும் தொடர்ச்சியாக நடந்து வந்ததது மட்டுமல்லாமல் இந்தியா, இலங்கையைச் சேர்ந்த பெண் எழுத்தாளர்கள், சமூகநலவாதிகள், பெண்ணிய அமைப்புப் பெண்கள் என்று பலர் கலந்துரையாடல்களில் கலந்து கொண்டனர். அத்துடன் பெண் படைப்பாளிகளின் படைப்புகளை பதிவாக்கி 8 பெண்கள் சந்திப்பு மலர்களும் வெளிவந்துள்ளன.

இச்சந்திப்பில் பெண்களின் உடல், உள நலம், சுனாமியின் அனர்த்தங்களும் பெண்களின் நிலையும், நேரில் கண்டவையும் சில அறிவிப்புகளும், தொடரும் வன்முறைகளும் வாழ்க்கைப் பிரச்சினைகளும், வீடுகளில் தொடர்பவை, தொடரும் போரும் பெண்களும் குழந்தைகளும், தற்கால இலக்கியம், சினிமா, ஊடகங்களில் பெண்கள் (இலக்கியத்தில் பெண்கள், சினிமாவும் பெண்களும், ஊடகங்களும் பெண்களும்) போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

மேலும் பெண்கள் சந்திப்பு மலர் வெளியீடும் அதன் மீதான விமர்சனமும், கலாச்சாரமும் பாலியல் பிரச்சினைகளும் போன்ற விடயங்களும் இடம் பெறவுள்ளது. இவற்றுடன் பெண்களின் படைப்புக்கள் - ஓவியக் கண்காட்சி, குறும்படக் காட்சிகள், நாடகங்கள் என்பனவும் இடம்பெறுகின்றது.

"அன்புச் சகோதரிகள் அனைவரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்து இச்சந்திப்பினை சிறப்படையச் செய்ய வேண்டும்" என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் ராஜேஸ்பாலா கேட்டுக் கொண்டுள்ளார். மேற்கண்ட விடயங்களை விட மேலதிக விடயங்களை கலந்துரையாடல்களில் சேர்க்க விரும்புவோர் தங்கள் கருத்துக்களை புரட்டாதி மாதக் கடைசிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்புவோர் தொடர்புகளுக்கு rajesbala@hotmail.com என்ற இணைய முகவரியில் தொடர்பு கொள்ளவும்.மேற்கண்ட விடயங்கள் பற்றியும் அல்லது பெண்கள் சம்பந்தப்பட்ட எந்த



விடயமானாலும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பினால் சம்பந்தப்பட்ட கருத்துரையாடல்களில் வாசிக்கப்படுவதோடு அடுத்த பெண்கள் சந்திப்பு மலரிலும் அது வெளியிடப்படும் என்பதையும் ராஜேஸ் பாலா (படம்) அறியத் தந்து உள்ளார்.


SAFEWAY SHOPFITTERS
Shop Front - Roller Shutter - Glass - Signs
* Shop Shutters * Remote Control Garage hutters
* Van Shutters * Door Closers * Industrial Shutters
* Door/Shutters Locks * Shutter Altrations
CHOICE OF ANY POWDER COATED COLOUR
SALES - SERVICE - REPAIR
LEICESTER - LONDON - BIRMINGHAM
FREE Esatimates
Tel Head office: 020 8843 2235
FREE Survey

Ellis & Co. Residential Sale & Letting
வீடு வாடகைக்கோ, விற்கவோ, வாங்கவோ மேலும் Mortgage தேவைக்கோ நீங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
Kumar on
(T) 020 8204 3300
(F) 020 8206 1102
(M) 07984 184064
email: kenton@ellisandco.co.uk
272, Streatfield Road, Kenton, Harrow

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
UK's No.1 National Tamil Newspaper
Advertise in UDHAYAN for best results
020 8952 5677

YAASHIK Motors
* MOT - Diesel & Petrol
* Performance Tuning & Parts
* Mail Order
* Seat, Audi Specialist
* Servicing, Clutches, etc.
Tel: 020 8998 8900
Unit 5A, 255 Water Road, Wembley, Middx. HA0 1JW

RASIAH & CO. Solicitors
* Conveyancing (Residential & Commercial)
* Immigration
* Matrimonial
* Landlord & Tenants
* Police Station Representation
* Legal Aid work undertaken
020 8543 4040
020 8543 2400
180A Merton High Street, London SW19 1AY

MANGALA MOTORS
High Quality at Sensible Prices
* Car/Van Sales
* Full and Iterim service
* MOT & Mechanical Repairs
* Professional Technician
* Fully Guranteed Job
Call On
020 8203 6655
Unit 1, 3 & 4, The Bridges
Aerodrome Road, London NW4 4SS


SIA Gold House
LKS
346 High Street North
Manor Park London E12 6PN
020 8470 8282

British Gutter Systems
Tel: 020 8573 6333/ Fax: 020 8573 2390
Maintenance Free Leak Proof Gutters
Mobile Factory
Our installation team come to your home with our 'Mobile factory' and produce 'Made to Measure' guttering on site. Lengths of upto 70ft are not uncommon
Seamles (Jointless) Gutters | Downpipe | Facia, Soffis
Needs virtually no maintenance. Protects your roof's structure. Never Reapaint or Repair. Saves you time, money and worry. Adds value to your home
Visit Our Show room
Unit 2, Hayes Metro Centre, Springfield Road, hayes, Middlesex UB4 0LE

Champers Wines CASH & CARRY
Suppliers of Wines, Beers and Spirits
Wide range of product available at very Competitive Prices
For further details contact
Sales on Tel: 020 8961 2889
Fax: 020 8963 0989
Unit 11, Cumberland Avenue, Park Royal, London NW10 7RT
We Accept All Major Credit Cards


New Century Glazing Ltd.
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS, FULLY WELDED and INTERNALLY BEADED...
Member of FENSA
Free Estimates
Tel: 020 8848 0189
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

MARKANDAN & SHARMA
Solicitors and Administratord for oaths
Nathan & Chelva
Solicitors
Mr. M. Markandan L.L.B (Hons)
available for consultation on:
079 5638 6576
Bow Business Centre
153-159 Bow Road
London E3 2SE
Tel: 020 8981 5330
Fax: 020 8981 5350
or
169 Tooting High Street
Tooting
London SW17 0SY
Tel: 020 8672 1800
Fax: 020 8672 0105


FUNTASIA
Fancy Dress & Party Shop
Specialist in Party Goods
Established since 1984
229 Kenton Road, Kenton, Harrow HA3 0HD
Tel/Fax: 020 8907 1333
Email: funtasia@london.com
Web: www.funtasiaworld.com

EVERGLADE WINDOWS

Double glazing styled with excellence
Quality
UPVc & Aluminium Windows
Patio Doors
Conservatories
Doors
10 year Guarantee
Visit Our Showroom to see the extensive range of products
www.everglade.co.uk
020 8998 8775

CITY DEVELOPMENT & CONSTRUCTION
The Complete Building Service
New Build
Extensions
Renovations
Conversions
Plumbing
Electrical
Central Heating
Bricklaying
Plastering
Carpentry
Loft Conversions
Fax: 020 8472 8493
020 8470 2740
352-354 Katherine Road London E7 8NW
07768 936 114 or 07831 592 553

Mo's Restaurant & Takeway
Sri Lankan & South Indian Cuisine
Catering Undertaken for Weddings, Parties and Special Occations.
Open 7 Days a week.
Mo's Kingsbury:
559 Kingsbury Road
Kinsbury
NW9 9EL
020 8204 7667
Mo's Wembley:
25 St. John's Road
Wmbley
HA9 7HU
020 8795 1254

Shipping To Sri Lanka & Worldwide
We started shipping - Others followed
We have shipped 165 cars to Colombo in one vessel
For a friendly service Contact
Percy Jayawardena
Perma International
62D Cricklewood Broadway
London NW2 3EP
Tel: 020 8452 6750 Fax: 020 8452 3882
e-mail permainternational@yahoo.co.uk

உங்களின்
உற்ற
புலம்
பத்திரிகை
உதயன்

# நாட்காட்டியும் குழப்பமும் □ சிலரின் கருத்துக்கள் :

வசந்தக் குருக்கள் - கற்பக விநாயகர் ஆலயம், வோல்தம்ஸ்ரோ :

லண்டனில் பல அலயங்கள் தோன்றி வளர்ந்து கொண்டு வருகின்ற விடயம் மகிழ்ச்சிக்குரியது. இவை எல்லாம் மக்களின் ஆன்மீகப் புசிக்கு அருள் வழங்கும் இடம் என்பதில் ஐயமில்லை. ஆனால் எல்லா ஆலயங்களிலும் விரத நாட்கள் ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும் என்பது ஒவ்வொரு அடியார்களதும் அடிமனதில் இருக்கும் விருப்பமாகும். வெவ்வேறு ஆலயங்களில் வெவ்வேறு நாட்களில் நடைபெறுவதால் மக்கள் மனக்குழப்பம் அடைகிறார்கள். குறிப்பாக தைப்பொங்கல், சிவராத்திரி, வரதலட்சுமி, கந்தசஷ்டி, கேதாரகௌரி, தீபாவளி, நவராத்திரி, திருபெம்பாவை, போன்ற விரத நாட்களில் பஞ்சாங்க வேறுபாட்டால் மன வேறுபாடும் வருகிறது. நிலையான முடிவுடன் இவ்விழாக்களை செய்வதால் மட்டுமே அடுத்த சந்ததியினரை ஆலயத் தொடர்புடன் ஈடுபடுத்த முடியும். இல்லை எனின் ஆலயவழிபாடுகள் விரைவில் சீரழிந்துவிடும் என்பதையே முடிவாகக் கொள்ளலாம்.



ரவீந்திரமோகன் - சைவ முன்னேற்றச் சங்கம்.

எந்தப் பஞ்சாங்கத்தை பின்பற்றுவது என்று தெரிந்து ஏற்றுக்கொள்ளும் அறிவு எம்மிடம் இல்லை. ஆனால் தற்போது இரு வெவ்வேறு தினங்களில் வரும் நாட்களுக்கு பதிலாக இன்னுமொரு பொதுத் தினத்தை தீர்வாகக் கொள்ள முடியாது. அது மூன்றாவது தினமாக அமைந்துவிடும். தற்போதுள்ள சிக்கலை மேலும் மோசமாக்கிவிடும். இந்த பஞ்சாங்கம் என்பது பணம் சம்பந்தப்பட்ட விடயமாக உள்ளது. அது தற்போது தனிநபர்களின் கைகளில் உள்ளது. அவர்கள் தங்களது வேறுபாடுகளையும் பொருளாதார நலன்களையும் ஒரு புறம் தள்ளிவிட்டு சைவத்துக்காகவும் அடியார்களுக்காகவும் ஒன்றுபட வேண்டும். லண்டனில் சூரியோதத்தை வைத்து பஞ்சாங்கம் கணிக்கப்பட்டால் அது ஒரு பொதுவான எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமையும்.

தவராணி நகுலேந்திரன் - ஆசிரியை, பாரதி தமிழ் பள்ளி.



ஆலயங்களும், வழிபாடுகளும், வழிபாட்டு முறைகளும் மக்களை நல்வழி படுத்தவே உருவானது. அதனால் தான் நம் முன்னோர்கள் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று சொல்லி வைத்துள்ளார்கள். ஏனென்றால் சமூகத்தின் அடித்தளமாக கோயில்கள் இருந்தன. ஆனால் இன்று லண்டனில் நடப்பவை என் போன்ற தமிழ் சைவர்களுக்கு மிகவும் அதிருப்தியாக உள்ளது. மன அமைதி யை வேண்டி விரதமிருக்கும் போதும் மகிழ்ச்சியுடன் எமது பொங்கல் போன்ற பண்டிகைகளைக் கொண்டாடும் போதும் நாம் குழப்பத்திற்கு உள்ளாகிறோம். "கிறிஸ்மஸ் எல்லோருக்கும் ஒரே நாளில் வருகிறது எங்களுக்கு ஏன் பொங்கல் வெவ்வேறு நாளில் வருகிறது" என மாணவ, மாணவிகள் கேட்கும் போது, பதில் சொல்ல முடியாதுள்ளது. உண்மை நிலவரத்தை அதாவது சமயத் தலைவர்களுக்கிடையே உள்ள போட்டி பொறாமைகளை மாணவர்களுக்கு விளக்கினால் அவர்களுக்கு உள்ள சமயப்பற்றை அவர்கள் இழந்து விடுவார்கள் என்று பயமாக உள்ளது. பெரியவர்களே தங்களுக்குள் போட்டி பொறாமையுடன் ஒன்றுபடாமல் செயற்பட்டால் நாங்கள் எப்படி மாணவர்களிடம் சென்று சைவத்தையும் தமிழையும் வளர்க்க முடியும். இந்நிலையை மாற்றி எல்லோரும் ஒன்றாக சைவ விழாக்களையும் வழிபாடுகளையும் கொண்டாட லண்டனில் உள்ள சைவத் தமிழ் தலைவர்கள் முன்வரவேண்டும்.

## சாமியை ஆட்டுவிக்கும் ஆசாமிகள்

3ம், 6ம் பக்கத் தொடர்ச்சி

தமிழ் சைவர்களைக் குழப்பும் நாட்காட்டிப் பிரச்சினை தற்போதைக்கு தீரப் போவதில்லை என்பதையே நிகழ்வுகள் தெரிவிக்கின்றன.

எந்த நாட்காட்டி ?

ஆலயங்கள் வாக்கிய பஞ்சாங்கத்தையோ அல்லது திருக்கணித பஞ்சாங்கத்தையோ பின்பற்றுவதன் நோக்கம் அவற்றின் மீது கொண்ட நம்பிக்கையல்ல. ஓரளவு வளர்ந்த பெரிய ஆலயங்கள் சீவரத்தினத்துக்கு நட்பாக இருந்தால் வாக்கிய பஞ்சாங்கத்தையும் சச்சிதானந்தம் அல்லது ஒன்றியத்தின் மற்றைய கோயில் தலைவர்கள் நட்பாக இருந்தால் திருக்கணித பஞ்சாங்கத்தையும் பின்பற்றுகின்றன. வோல்தம்ஸ்ரோ பிள்ளையார் கோயிலை எடுத்துக் கொண்டால் அவர்கள் வாக்கிய பஞ்சாங்கத்தை பின்பற்றுகின்றனர். அதற்கு காரணம் அவர்கள் சீவரத்தினத்தின் நண்பர்கள் என்பதல்ல. வாக்கிய பஞ்சாங்கத்தின்படி நல்ல தினங்கள் யாவும் ஈஸ்ற்காம் முருகன் கோயிலின் தினத்துக்கு முதல்நாளே வந்துவிடுவதாகும். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கோயில்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பெரிய கோயில்களின் அதே தினத்தில் அல்லது அதற்கு முதல்நாள் நல்ல தினங்களை கொண்டாட விரும்புகின்றன. அதன் மூலம் அவ்வாலயங்களது வருமானம் பாதிக்கப்படாமல் இருக்கும்.

சீவரத்தினம், சச்சிதானந்தன் போன்ற ஆசாமிகளே லண்டனில் உள்ள சாமிகளை ஆட்டிப்படைக்கின்றனர். இவர்கள் இருவருக்கிடையேயும் சமரசம் செய்து லண்டன் வாழ் தமிழர்களைக் குழப்பாமல் ஒரு நாட்காட்டியை பின்பற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள் எதுவும் இதுவரை பலனளிக்கவில்லை. இவர்கள் இருவரும் ஒரே மேடையில் தோன்றி இதனை சுமுகமாகத் தீர்த்து வைப்பதாக உறுதி அளித்தனர். அது பலனளிக்கவில்லை. மேலும் தீபம் தொலைக்காட்சி இது தொடர்பான ஒரு நிகழ்ச்சியை ஈலிங் ரவுன்ஹோலில் ஏற்பாடு செய்து சைவத் தலைவர்களை வரவழைத்தது. ஆனால் அத்தலைவர்கள் எந்த ஒரு உறுதியான முடிவுக்கும் வரவில்லை. பல நூறு பவுண்கள் செலவில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பு தீபத்தில் ஒளிபரப்பாகவேயில்லை

தமிழ் பக்தர்களைக் குழப்பும் இந்த இரு தனிநபர்களுக்கிடையே உள்ள பிரச்சினையை தீர்க்க முடியாமல் கையாலாகாத நிலையில் உள்ள சைவ முன்னேற்றச் சங்கம். முப்பது வரையுள்ள கோயில்களில் கடந்த எட்டு ஆண்டுகளாக 5 கோயில்களுடன் இன்னும் வளராமல் இருக்கும் ஒன்றியம், தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் இல்லாவிட்டால் வன்னிக்கு அனுப்பி கால் முறிப்பன் என்று சன்னதம் போடும் சீவரத்தினம், எட்டென்ன எண்பது மாநாடு நடத்தினாலும் இவர்களால் சைவநீதியை விளங்க வைக்க முடியுமா என்பது சந்தேகமே.

## லண்டன் சைவ மாநாடு

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தினது 8வது சைவமாநாடு ஓகஸ்ட் 20, 21ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. முதலாவது நாள் மாநாடு விம்பிள்டன் பிள்ளையார் கோயிலிலும் இரண்டாவது நாள் மாநாடு அச்சுவே முருகன் கோயிலிலும் நடைபெற உள்ளது. விம்பிள்டன் பிள்ளையார் கோயில், இலண்டன் சிவன் கோயில், கனகதுர்க்கை அம்மன் கோயில், ஸ்ரோன்லி அம்மன் கோயில், ஆச்சுவே முருகன் கோயில் ஆகியவற்றின் கூட்டே பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம். இலங்கை, இந்தியா மற்றும் நாடுகளில் இருந்து சைவ அறிஞர்கள் பலர் இம்மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர்.

### பஞ்சாங்கங்களின் கணிப்பாளர்கள் கௌசீகர் □ ஜெகதீஸ்வர சர்மா

## சந்திப்பு

சைவ மாநாட்டிற்கு பின் திருக்கணித, வாக்கிய பஞ்சாங்கங்களின் கணிப்பாளர்களுக்கு இடையேயான உயர்நிலைச் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது. சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் திருக்கணித பஞ்சாங்கத்தை நிலைநாட்டும் தமது நிலைப்பாட்டை விளக்க இம்முறை சைவ மாநாட்டுக்கு மட்டுவிலைச் சேர்ந்த சிதம்பரநாத ஜெகதீஸ்வர சர்மாவை வரவழைக்க உள்ளனர். அதேசமயம் வாக்கிய பஞ்சாங்கத்தை பின்பற்றும் ஆலயங்கள் வாக்கிய பஞ்சாங்க கணிப்பாளர் கௌசீகரை கனடாவில் இருந்து வரவழைக்க உள்ளனர். இக் கணிப்பாளர்களது சந்திப்பு சைவ மாநாட்டில் அல்லாமல் விசேடமாக சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுவான பஞ்சாங்கம் ஒன்றை உருவாக்க முயற்சிக்கப்படுகிறது.

Euro Auto Technik
We Specialise in Mercades and BMW. Repairs, servicing for all European and Japanese vehicles.
M.O.T only £35.00
Call: Amarjit Sagoo on 020 8573 4555
Unit 2, Tudor Works Beaconsfield Road, Hayes UB4 OSL

MAHARAJA
Indian Meat & Poultry
Wholesalers & Retailers of Fresh Meat & Poultry Suppliers to the Trade & Restaurant
We also sell Boiler Chicken Grouse, Quails, (Bhatera), Deer, Pigeon, Rabbit, Spring Lamb, and Whole Mutton at low prices
We Sell & Rent Films on Video & DVD
Tel: 020 8813 7700
776 Uxbridge Road, Hayes, mlddx. UB4 0RS

AA EXPRESS
24 Hours Service
எங்கும் எப்போதும் அழைக்கலாம்
உங்கள் தேவை எங்கள் சேவை
தமிழ் சாரதிகள் உள்ளார்கள்
020 89020123
எங்கள் கம்பனிக்கு முழு அல்லது பகுதிநேர வாகன சாரதிகள் தேவை. வாரம் £500 மேல் கிடைக்கும். PCO Licence needed.
If you don't have, we will help you to get.

லண்டனில் நிர்வாக இழுபறி

## தாயகத்தில் 450 சிறார்களின் உயிர்காப்பு தொடர்பு துண்டிப்பு



ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தினூடாக தாயகத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு இல்லங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவிகள் திடீரென நிறுத்தப்பட்டு உள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சில மாதங்களாக சிறார்களுக்கான முக்கிய உயிர்காப்பு தொடர்பு துண்டிக்கப்பட்டதுடன் ஆலயத்தினால் நடத்தப்படும் கணணிப் பயிற்சி நிலையங்களின் ஆசிரியர்களுக்கான சம்பளமும் கொடுக்கப்படவில்லை. அதனால் அக்குடும்பங்களிலும் அடுப்பு பற்றாதநிலை ஏற்பட்டுள்ளது. நிர்வாக சபையை பிரேமச்சந்திரன் தலைமையிலான அறங்காவல் சபை பொறுப்பேற்றதன் பின்னர் இல்லங்களுக்கு அனுப்பப்பட வேண்டிய நிதி வங்கியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

ஈலிங் கன்கதுர்க்கை அம்மன் ஆலயம் தனது வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை தாயகத்துக்கு அனுப்பும் என முன் னைய நிர்வாகத்தினர் உறுதியளித்திருந்தனர். தற்போது ஆலயத்தின் வங்கியில் £75,000 க்கும் அதிகமான தொகை வைப்பில் உள்ளது. மேலும் சுனாமி நிதி £18,000மும் வங்கி வைப்பில் உள்ளது. அதைவிடவும் குழந்தைகளைத் தத்தெடுத்தவர்கள் செலுத்தும் நிதி £24,000 வரை வங்கியில் உள்ளது. அழுத்தங்கள் காரணமாக யூலை இறுதியில் தத்தெடுத்தவர்கள் வழங்கிய நிதி யில் ஒரு பகுதி மட்டுமே அனுப்பப்பட்டு உள்ளது. ஏன் பதவிப் போட்டிகளுக்காக அப்பாவிகளின் வயிற்றில் அடிக்கிறார்கள்?

## யாழுக்கான ஜேர்மன் உதவி கைநழுவியது

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் நீர்ச்சுத்திகரிப்பு இயந்திர நிலையம் அமைப்பதற்காக ஜேர்மனியால் வழங்கப்பட்ட நிதி தமிழ் நிர்வாகத்தின் அதிகார இழுபறியால் அம்பலாங்கொடை கிராமத்துக்கு வழங்கப்பட்டு உள்ளது. இது குறித்து ஜேர்மனியின் 'போகும்' நகரத்திலிருந்து வெளியாகும் 'ஸ்டாட்பிகல் போகும்' என்ற பத்திரிகை விரிவான செய்தியை வெளியிட்டு உள்ளது. இத்திட்டத்தை அமுல்படுத்த THW நிலையத்தின் திட்ட இணைப்பாளர் டாக்டர் பெனார்ட் இஸ்பிரிங்கர் யாழ்ப்பாணத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி இத்திட்டத்தை வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் "யாழ்ப்பாணத்தில் இருந்து எதிர்மறையான தகவல்களையே பெற்றுக்கொள்கிறோம். அதிகார அலுவலக நிர்வாகத் தடைகள் வேறு. இதனால் இப்போதைக்கு இத்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்த முடியாதநிலை உள்ளது" என்று 'ஸ்டாட்பிகல் போகும்' பத்திரிகை செய்தி வெயிளிட்டு உள்ளது.



Projektpatenschaft „Hilfe für Jaffna"

Trinkwasserlabor aus Bochum hilft in Jaffna auf Sri Lanka

Projekt „Hilfe für Jaffna" - Langfristiges Engagement - Stadt koordiniert

ஜேர்மனியில் உள்ள 'போகும்' நகர மக்கள் 50 ஆயிரம் யூரோ (70 லட்சம் ரூபா) பணத்தைத் திரட்டினர். இந்த நிதியைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் நடமாடும் நீர் சுத்திகரிக்கும் நிலையம் ஒன்றை நிறுவி, அப்பகுதியில் சுத்தமான நீர் கிடைப்பதை உறுதிசெய்வதற்கென 'போகும்' நகரத் தலைவி ஒட்லி ஸ்சோல்ஸ் திட்டமிட்டார்.

'போகும்' மக்களால் வழங்கப்பட்ட இந்த நிதி குறித்த நோக்கத்துக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் மேலும் அத்திட்டம் எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது என தங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. அனால் தமிழ் நிர்வாகத் தலைமைகள் இந்த நிபந்தனைக்கு ஒத்துக் கொள்ள மறுத்ததால் இத்திட்டம் தமிழ் மக்களின் கையை நழுவிச் சென்றுள்ளது.

சேனன் : G8 மாநாடு ஒரு பார்வை

# G8 நாடுகளால் வறுமையை வரலாறாக்க முடியுமா ?




வறுமையை வரலாறாக்குவோம் என்ற கோசத்துடன் யூலை 6 முதல் 8 வரை ஸ்கொட்லாந்தில் இடம்பெற்ற G8 என்ற செல்வந்த நாடுகளின் மாநாடு அரையும் குறையுமாக முடிவடைந்து உள்ளது. ஆபிரிக்க நாடுகளுக்கான உதவித்தொகை 50 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கப்பட்டது. மற்றையது சுற்றுச் சூழல் பற்றிய அடிப்படையை அமெரிக்கா ஏற்றுக் கொண்டது. அதாவது உலக வெப்பநிலை அதிகரிக்கிறது என்பது நிஜமானது என்றும் அதற்கு மனித செயற்பாடுகளே காரணம் என்பதும் ஒரு பத்து வயதுக் குழந்தைக்கே தெரிந்த விடயத்தை அமெரிக்கா மாநாட்டில் ஏற்றுக்கொண்டது. மேலும் சில ஆபிரிக்க நாடுகளின் கடன்பழுவை நீக்க மாநாட்டில் ஒத்துக் கொள்ளப்பட்டு உள்ளது. ஆனால் தனியார் நிறுவனங்களிடம் அறாவட்டிக்கு வாங்கிய கடனை இந்த நாடுகள் எப்படி அழிப்பது.

இந்த மாநாட்டைஒட்டி வறிய நாடுகளின் கடன்பழு பற்றிய கதைகள் அடிக்கடி ஊடகங்களில் அடிபடுவதும் 'பொப் கேல்டோப்' இன் 'லைப் எய்ட்' என்ற இசை நிகழ்வு இடம்பெற்றதும் தெரிந்ததே. இந்த திடீர் அக்கறை இவர்களுக்கு எப்படி வந்தது?

வறிய நாடுகளின் கடன்தொகை 2.5 ரில்லியன் டொலர்களுக்கும் ( $ 2,500,000,000,000 ) அதிகமாக வளர்ந்துவிட்டது. ஆபிரிக்க நாடுக ளின் கடன் 68 பில்லியன்களுக்கு மேலான பணத்தை மேற்குலக நாடுகளுக்கும் 220 பில்லியனுக்கும் மேலான பணத்தை மேற்கு நாட்டு தனியார் கம்பனிகளுக்கும் கட்ட வேண்டிய சிக்கல் நிலையில் உள்ளன. முன்பு போல் நேரடியான சுரண்டலும் அடிமைப்படுத்தலும் சாத்தியமில்லாத ஒரு சூழ்நிலையில் இந்த பெருந்தொகை பணத்தை ஆபிரிக்க நாடுகளிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியாது என்பது இந்த மேற்கு நாடுகளுக்கும் அதன் முதலாளிகளுக்கும் நன்கு தெரியும். இதைவிட சீனா, இந்தியா என்று ஆசியாவில் இருந்து பூதமாக எழும்பும் பொருளாதாரங்கள் ஆபிரிக்காவை கைப்பற்றக் கூடிய ஆபத்தும் உண்டு. அதை முறியடிக்கவும் மேலும் தங்கள் சுரண்டலை பலப்படுத்தவும் புதிய வியாபாரத் தந்திரங்களை நாடுகின்றன இந்த பணக்கார மேற்கலக நாடுகள்.

நாங்கள் சொல்லும் வியாபார ஒப்பந்தங்களுக்கு உடன்படுங்கள். உங்கள் கடனை நாம் தள்ளிவைக்கின்றோம் என்பது தான் இவர்களது இரகசிய நோக்கம். இந்த பிளாக்மெயிலை கரிசனை மிக்க நடவடிக்கையாக படம் காட்டுகின்றன ஊடகங்கள்.

2006ம் ஆண்டுக்கான அமெரிக்காவின் ஆயுத உற்பத்திச் செலவு 491 பில்லியன் டொலர்கள் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. முழு ஐரோப்பிய நாடுகளிலும் அளவுக்கதிகமாக ஆயுத உற்பத்தி செய்வது இங்கிலாந்து. இந்த இரண்டு நாடுகள் மட்டும் தங்களின் ஆயுத இராணுவ செலவை ஒரு வருடத்திற்கு ஒத்திப் போட்டாலே போதும் உலகின் வறுமை பாதியாய் குறைந்துவிடும். அப்படியிருக்க இவர்கள் காட்டும் கரிசனை பூச்சாண்டியை நாம் நம்பமுடியுமா? பொப் கேல்டவ் போன்றவர்கள் நம்புவார்கள். ஏனெனில் அவர்களுக்கு இந்த செயரிட்டி அரசியல் பணமும் புகழும் சேர்த்து வளருகிறது.

முன்பு உகண்டாவின் கடனை தங்களின் சுயநலத்திற்காக இவர்கள் இல்லாதொழித்த போது பயனடைந்தது யார்? இன்றைக்கும் உலகின் வறிய நாடுகளில் ஒன்று தான் உகண்டா. உகண்டாவின் ஜனநாயகம் நோக்கிய மாற்றத்தை இங்கிலாந்து வெளிநாட்டு அமைச்சர் வரவேற்ற அதே தருணத்தில் சமூக சேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 23 வீதத்தை ஆயுதக் கொள்வனவுக்கு எடுத்துக் கொண்டு உள்ளது உகண்டா. ஆயுத ஏற்றுமதி இங்கிலாந்தினதும் அமெரிக்காவினதும் முக்கிய வருவாய் தரும் துறை. அதனால் இது பற்றி அவர்கள் கண்டுகொள்ளப் போவதில்லை. இவர்கள் பிச்சை போடும் பணம் ஆயுதக் கொள்வனவு மூலம் இவர்கள் கைகளுக்கே மீண்டும் வந்துவிடும் என்று இவர்களுக்குத் தெரியும்.

தன்சானியா உலகின் வறிய நாடுகளில் ஒன்று. இங்கு வெளிநாட்டுக் கடனை அடைப்பதற்காக அரசாங்கம் தண்ணீருக்கு விலை ஏற்படுத்தியுள்ளது. கல்விக்கு கட்டணத்தை உயர்த்தி உள்ளது. இந்த மிகவும் வறிய நாட்டில் கல்வியும் தண்ணியும் உணவும் இன்றி வாடிவதங்கி பணக்கார நாடுகளுக்கு வட்டிகட்டும் படி பணிக்கப்பட்டுள்ளார்கள் இந்த மக்கள். இந்த வட்டிப்பணம் மேற்குலக நாடுகளின் வறிய மக்களுக்கும் போய்ச்சேருவதில்லை. அற்பப்பணத்தில் நித்தம் வாழ்க்கை நடத்த இந்த மக்கள் போராடிக் கொண்டிருக்கையில் மலேசியாவின் மகதிர் முகமது இங்கிலாந்து அளவுக்கதிகமாக டோல் பணம் (அரச உதவிப்பணம்) வழங்குவதாக முக்கி முனகி முறையிடுகிறார். வறிய நாடுகளிலும் சரி வளர்ச்சியடைந்த நாடுகளிலும் சரி இந்த பிரச்சனையை உருவாக்குவதும் தக்க வைத்திருப்பதும் ஆதிக்க சக்திகளும் அதன் அடிவருடிகளும் தான். அதனால் தான் இது ஒரு சர்வதேச பிரச்சனை.

இந்தப் பிரச்சனையை 'Live 8' போன்ற இசை நிகழ்ச்சிகள் மூலம் தீர்வுக்கு கொண்டுவரமுடியாது. எல்லாக் கண்டங்களிலும் வளம் நிறைந்த கண்டம் ஆபிரிக்கா கண்டம். தொடர்ந்தும் ஆபிரிக்க மக்களை வறுமைக் கோட்டின் கீழ் வைத்து சுரண்டிக் கொண்டிருக்கும் அமெரிக்கா போன்ற பணக்கார நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகள் தான் பிரச்சனைக்குரிய விடயம்.

ஈராக் சதாம் உசைன் மற்றும் கொங்கோ மொபுட்டு முதற் கொண்டு பல்வேறு ஆபிரிக்க ஊழல் நிறைந்த உதவாக்கரைகளை வளர்த்துவிட்டு ஆரிரிக்க அரசுகளை சுரண்டல் இயந்திரமாக்கியது இதே பணக்கார ஏகாதிபத்தியம் தான். இவர்களிடம் போய் எப்படி தீர்வை எதிர்பார்க்க முடியும்? ஊழல் அற்ற ஆரிரிக்க நாடுகளுக்கு மட்டுமே நாம் பண உதவி வழங்குவோம் என்று அமெரிக்கா அறிவித்தது சிரிப்பை வரவழைக்காமல் என்ன செய்யும்?

ஆபிரிக்காவின் கடன் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. மலேரியா, டயரியா, நிமோனியா எல்லாவற்றுக்கும் மேலான பெரிய உயிர்க்கொல்லி இந்தக் கடனும் அதன் வட்டியும். இந்த 8 நாடுகள் வறுமை பற்றி கூடிக்கதைக்க இருக்கும் 4 நாளில் 120,000 ஆபிரிக்க சிறுவர் இறந்து மடிவர். இப்படி ஒரு பாரிய பிரச்சனையை ஆபிரிக்காவை காப்பாற்ற போவதாக இந்த எட்டு நாடுகள் காட்டும் பாசாங்கில் மயங்கி அவர்கள் பின்னால் போக முடியாது. கடனை தீர்ப்பது அவர்களுக்கு ஒரு வியாபார தந்திரம்.

அதே போல் பதிவு செய்யப்பட்ட செயாரிட்டிகளுடனும் நாம் சேர்ந்து இதற்கெதிராக போ ராட முடியாது. வறுமை வளர, வளர இந்த செயாரிட்டிகள் பண பலத்தில் கொழுத்து வருகின்றனவே அன்றி இவர்கள் வறுமைக்கெதிராக வறுமையை அழித்தொழிக்க எதுவும் செய்யவில்லை. மக்கள் இரக்கத்தில் கொடுக்கும் பணத்தை அள்ளிச் சுருட்டி உல்லாசமாய் திரிகிறார்கள் இந்த செயாரிட்டிகளின் தலைமை உத்தியோகஸ்தர்கள். மக்கள் வழங்கும் ஒவ்வொரு டொலரிலும் 10 சதங்கள் மட்டுமே உதவிக்காக பயன்படுத்தப்படுகின்றது. போர் நிறுத்தத்தை அடுத்தும் சுனாமியைத் தொடர்ந்தும் இலங்கைக்குள் படை எடுத்துள்ள செயரிட்டிகள் வடக்கு கிழக்கில் பாபக்கியூ போடுவதில் காட்டிய தீவரம் குறிப்பிடத்தக்கது. மிகுதி சம்பளம், நிர்வாகச்செலவு என்று சீரழிந்து போகின்றது. இலங்கையில் உள்ள எம்மவர்களின் செயரிட்டிகளின் நிலையும் இதுதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முன்னாள் ஒக்ஸ்பாம் இயக்குநர் பிராங்க் யூட் 1990ல் லேபர் கட்சியின் பியர் ( Peer ) ஆனதும் ஜஸ்டின் போர்சைத் என்பவர் கொள்கைவகுப்பு இயக்குனராக அரசில் வேலை செய்வதும் குறிப்பிடத்தக்கது. இச்செயரிட்டி அமைப்புகள் யாருக்கு சேவகம் செய்கின்றன என்பது ஒன்றும் இரகசியம் இல்லை. இங்கிலாந்தில் செயாரிட்டி வியாபாரம் ஒரு முக்கிய வியாபாரமாக வளர்ந்து வருகின்றது.

இந்த பூச்சாண்டிகளிடம் தீர்வு என்று ஒன்றுமேயில்லை. அதை அவர்களிடம் எதிர்பார்ப்பது எமது முட்டாள்தனம்.

# நாட்டியமும், இசையும் மட்டும் வாழ்வியல் தேவையல்ல தமிழ் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள் !



என் செல்வராஜா
நூலகவியலாளர்

இதுவரை காலமும் எமது வரலாறு எம்மை ஆண்டவர்களாலேயே எழுதப்பட்டன. இன்று இவ்வரலாற்றை மீளத்திருத்தி எழுதும் வாய்ப்பை நமது சிறார்கள் பெற்றிருக்கிறார்கள். எம்மை ஆக்கிரமித்து அடக்கி ஆண்ட ஐரோப்பியரின் கூடாரத்துக்குள்ளிருந்தே அதை எடுத்து எமது வரலாற்றை மீள எழுதும் ஆற்றலை எமது சிறார்கள் பெறுவார்கள். ஐரோப்பியரால் உதாசீனம் செய்யப்பட்ட எமது தமிழ் இலக்கியங்களை நவீன இலக்கியங்களை, எமது சமகாலப்படைப்பாளிகளின் ஆக்க இலக்கியங்களை, புலம்பெயர் நாடுகள் தோறும் இவர்கள் மொழிபெயர்த்துத் தருவார்கள். புதிய வரலாறு படைப்பார்கள். பாரதியின் கனவு, பாரதிதாசனின் கனவெல்லாம் புலம்பெயர்ந்த எமது ஈழத்தமிழரின் இரண்டாம் தலைமுறையினர் வழியாக நனவாகும் என்று உறுதியுடன் நம்புவோம். அந்த நம்பிக்கையுடன் அவர்களுக்கு வழிகாட்டுவோம்.

ஆண்டாண்டு காலமாகப் பூட்டப்பட்டிருந்த இந்தத் தேடலுக்கான கதவின் திறப்பு ஆசிரியர்களிடம் தான் உள்ளது. நீங்கள் தான் இந்தச் சிறுவர்களுக்கு தமிழையும் கலையையும் போதிப்பதுடன் எமது வரலாற்றை மீள எழுதும் சிந்தனையை, ஆற்றலை, இவர்களிடம் தூண்டிவிட வேண்டும். பெருமைமிகு எமது இலக்கியங்களை, இனவரலாற்றை, விடுதலைப் போராட்டத்தை இந்நாட்டவர் புரிந்தகொள்ள வழிசெய்யவேண்டும்.

பேர்லின் நகர தேசிய நூலகத்தில் ஏட்டுருவில் ஏராளமான தமிழ்ச் சுவடி நூல்கள் தேடுவாரற்றுக் கிடக்கின்றனவாம். இது ஒரு உதாரணம் மட்டுமே. எங்கெங்கே எமது கலைப்பொக்கிஷங்கள் இந்நாட்டில் ஐரோப்பியரால் கொண்டு வந்து பதுக்கப்பட்டு இருக்கின்றனவோ அதற்குப் பின்னால் எமது வரலாறும் இருக்கும். அதைத் தேடிப்பெற்று எமக்கு மீளவழங்கவேண்டிய மனவலுவை, பின்னணித் தகவல்களை நீங்கள் தான் இவர்களிடம் விதைக்க வேண்டும். தமக்குள்ள பன்மொழி ஆளமையால் அதை அவர்கள் கண்டறிவார்கள்.

நாட்டியம் பயில்வதும், ஒன்றிரண்டு இசைக்கருவிகளை பயன்படுத்தத் தெரிவதும் தான் எமது சிறுவர்களின் வாழ்வியல் தேவை அல்ல. அதற்கும் அப்பால் இவர்களின் தேடலை விரிவாக்கி வைக்க வேண்டியது ஆசிரியர்களின் பணியாகும். இதற்கு நீங்களும் உங்களை முதலில் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். நீங்கள் முதலில் தேடலை மேற்கொள்ளுங்கள். கற்பித்தலுடன் மட்டும் நீங்கள் கடமை முடிந்ததென்று நின்றுவிடாதீர்கள். தயவுசெய்து நீங்களும் தேடலுடன் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் அறிவை நீங்கள் விரிவாக்கும் வகையில் தேடலை உங்களுக்குள் வளர்த்துக் கொள்ளுங்கள். தீண்டப்படாமலுள்ள தமிழ் நூல்களைப் பெற்றுப் படியுங்கள்.

அதற்கு வசதியாக உங்களுக்கானதொரு நூலகத்தைக் கட்டியெழுப்புங்கள். கட்டியெழுப்புங்கள் என்றதும் தயவுசெய்து நான் ஏதோ நுலகக் கட்டிடம் ஒன்றை கட்டுங்கள் என்று சொல்கின்றேன் என்று தவறாக எண்ணிவிட வேண்டாம். நூல்களைச் சேகரித்து நூல்களால் ஒரு நூலகத்தை வளர்த்தெடுங்கள் என்றுதான் சொல்கின்றேன். உங்களுக்கென்று ஒரு தனிப்பட்ட கல்வியியல் சார் நூற்சேர்க்கையை உங்களில் ஒருவரின் வீட்டில் முதலில் தொடங்கலாம். நூல்களை தமக்குள்ளே பகிர்ந்து வாசிக்கலாம். தேவைப்படும் நூல்களை இலங்கையிலிருந்தோ இந்தியாவிலிருந்தோ தருவித்துக் கொள்ளலாம். அதற்கான வழிகளை நான் பெற்றுத் தருகின்றேன். உங்கள் தேடல் விரிவடைய உங்கள் மாணவர்களின் தேடலும் விரிவுபெறும். அதற்கான திட்டங்களை முதலில் வகுத்து, புதியதொரு அறிவார்ந்த சமுதாயத்தை புலம்பெயர் நாடுகளில் எமது அடுத்த தலைமுறையினர் உருவாக்க நீங்கள் முன்வாருங்கள். அதற்கான திறப்புக்கோர்வை இதோ உங்களிடம் தான் உள்ளது.

## இலங்கைக்கு பிரித்தானியா $73 மில்லியன் உதவி

இலங்கை அரசுக்கு பிரித்தானிய அரசு $73 மில்லியன் பெறுமதியான உதவிகளை வழங்க முன் வந்துள்ளது. இந்த உதவிகள் யாவும் இலங்கை அரசிடமே கையளிக்கப்படும் என இலங்கைக்கு இருநாள் விஜயம் மேற்கொண்ட பிரித்தானியாவின் அபிவிருத்தித்துறை அமைச்சர் கரத்தோமஸ் தெரிவித்து உள்ளார். வி.புலிகள் பிரித்தானியாவில் தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட இயக்கமாகவே இருப்பதாகவும் அண்மைக்காலத்தில் அத்தடையை நீக்கும் சாத்தியமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதேசமயம் சுனாமி முகாமைத்துவ அமைப்பின் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

(இக்கட்டுரை, சிவபத நவேந்திரனால் (படம்) 1974ல் யாழ் இந்துக் கல்லூரியின் கூடும் மண்டபத்தில் பேசப்பட்டது. பல ஆண்டுகள் கடந்த பின்னரும் அதன் கருத்தாளம் கருதி மீள்பிரசுரமாகிறது)

# பகுத்தறிவு (Rationalism)



பகுத்தறிவுவாதம் என்றவுடன் அகம் மகிழ்வோரைக் காண்கின்றோம், அஞ்சுவோரையும் காண்கின்றோம். ஏற்பவர்களைக் காண்கின்றோம், எதிர்ப்பவர்களையும் காண்கின்றோம். வாழ்த்துபவர்களையும் காண்கின்றோம், வைபவர்களையும் காண்கின்றோம். ஒரு விடயத்தின் முடிவைக் கண்மூடித்தனமாக எடுத்துவிட முடியாது. அவர் சொன்னார், இவர் சொன்னார் என அடுத்தவரின் அபிப்பிராய அடிப்படையில் முடிவினை எடுக்க முடியாது. 'உன்னையே நீ அறிவாய்' எதற்கும் ஏன் எதற்கு எப்படி என்று கேள். சிந்தித்தால் அறிவு வளரும். அறிவு வளர்ந்து விட்டால் மீட்சியும் மகிழ்வும் உண்டு, வாழ்வும் வளமும் உண்டு.

பகுத்தறிவு என்பது எமது ஆறாவது அறிவு. பகுத்தறிவே சீவ ராசிகளை மனிதரென்றும் மிருகமென்றும் பகுத்திட உதவுகின்றது. பகுத்தறிவு மக்களுக்கு நற்குணங்களை, நல்லொழுக்கங்களை, நவீன சாதனைகளை, ஏன் நாகரீகத்தையே கூட வழங்கியது எனலாம். நாம் இனிதாயும், இன்பமாயும், சுகமாயும், சுலபமாயும் குடும்பமாயும் கூட்டமாயும் வாழ வழிவகுத்தது இந்தப் பகுத்தறிவேயாகும்.

பகுத்தறிவு என்பது பகுத்து அல்லது வகுத்து அறிதல் எனப் பொருள்படும். ஒன்றைப் பிரித்து வகுத்து சரி-பிழை பார்த்து இலாப நட்டத்தைக் கணித்து நன்மை தீமையை மதிப்பிட்டு ஏற்றல் என்பது விளங்குகின்றது. இது தான் "குணம்நாடி, குற்றம் நாடி, அவற்றுள் மிகை நாடி மிக்க கொள்ளும்" நிலை. இதை விடுத்து கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும் நம்புவது பகுத்தறிவல்ல. இதை வள்ளுவனார் மிக அழகாக எடுத்துக் கூறுகின்றார்.

"தேதற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்"

கிரேக்க நாட்டில் வாழ்ந்த சோக்கிரட்டீஸ் பகுத்தறிவுப் பரவலுக்குப் பெரும் பங்காற்றியவர். எதையும் ஏன் எப்படி எங்ஙனம் என்ற கேள்விகளை எழுப்பியே ஏற்க வேண்டும் என வீதி வீதியாக, வீடு வீடாகச் சென்று விளக்கியவர். இவரது சிந்தனையும் பகுத்தறிவாற்றலுமே இவரின் ஆயுளை அகாலத்தில் முடித்தது. பகுத்தறிவுவாதிகள் பலரைக் காண்கின்றோம். உதாரணமாக இன்கசோல், அல்பேட் ஈன்ஸ்டின், பேற்றன் ரஸல், ஈவேரா பெரியார் ஆகியவர்கள் இவர்களுள் சிலர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் டாக்டர் ஏப்ரஹாம் ரீ. கோவூர் அவர்களின் தலைமையில் பகுத்தறிவு இயக்கமொன்று இயங்கிவந்தது. டாக்டர் கோவூரும் அவரது இயக்கத்தினரும் மூடநம்பிக்கைக்கும், அறியாமைக்கும் காலத்திற்குக் காலம் சவால் விட்டு அவற்றுடன் மோதித் தெளிவை எற்படுத்தும் பணியில் ஈடுபட்டு வந்தார்கள்.

தமிழ் உலகைப் பொறுத்தவரையில் பகுத்தறிவு வாதம் புதியதுமல்ல புரியாததுமல்ல. தமிழ் கொலு வீற்றிருந்த அந்நாளில் பகுத்தறிவே அடிப்படையாக இருந்தது. பகுத்தறிவுக்கொவ்வாத எதையும் தமிழுலகம் ஏற்றதல்ல. தமிழினதும் தமிழகத்தினதும் எழிலுக்கும் ஏற்றத்திற்கும் எழுச்சிக்கும் காரணமிது. ஓங்கி வளரும் தமிழ்ப் பேரரசை ஒதுக்கிவிடச் சூழ்ச்சிகள் மதங்களாகவும், வேதங்களாகவும் ஊடுருவின. அந்தோ! தமிழ்ப்பேரரசு வீழ்ந்தது. ஐயகோ! தமிழர்தம் பெருவாழ்வு அழிந்தது. மதியிழந்தது அறிவு மாசுபட்டது.

மீண்டும் தமிழுலகம் வாழ, தமிழ் வாழ, பகுத்தறிவு வழியுண்டு நமக்கு. மனம் தான் தேவை. மனது வைத்தால் வாழ்வுண்டு வளமுண்டு வளர்ச்சியுமுண்டு ஆட்சியுமுண்டு.

மகாகவி பாரதியார் கூறியது போல செத்தபிறகு சிவயோகம் வைகுந்தம் சேர்ந்திடலாமென்று எண்ணியராது ஆயிரம் தெய்வங்கள் உள எனத் தேடியலையாது, மாடனை காடனை வேடனைப் போற்றி மயங்காது தெளிந்த சுத்தஅறிவே சிவமென அறிந்து ஈடேறுவோமாக.

## தமிழினத்தின் தலைவன்

ஈழத்தமிழரின் விடுதலைக்காகப் போராடும் பிராபாகரனே உலகத் தமிழினத்தின் தலைவர் என தமிழகத்திலுள்ள விடுதலை ச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் தெரிவித்து உள்ளார். கனடா வில் நடைபெற்ற



இனியமாலை 2005ல் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## மட்டக்களப்பில் 'லண்டன் கற்பக விநாயகர் குடியிருப்பு'

கற்பக விநாயகர் ஆலயம் மட்டுவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு ஒன்றை அமைக்கவுள்ளது. லண்டன் வந்துள்ள ரிஆர்ஓ தலைவர் ரெஜியிடம் இதற்கான உறுதி வழங்கப்பட இருக்கிறது. இத்திட்டத்துக்கு £25,000களை வழங்க உள்ளதாக ஆலயத் தலைவர் கோபால் தெரிவித்தார். இதற்கு லண்டன் கற்பக விநாயகர் குடியிருப்பு என பெயரி டும் படி கேட்க உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குடித்தொகை தினம்

உலகின் குடித்தொகை தினம் யூலையில் கொண்டாடப் பட்டது. 1750ல் உலகின் குடித்தொகை 791மில்லியன்களாகவே இருந்தது. அடுத்த 54 ஆண்டுகளில் 1804ல் குடித் தொகை ஒரு பில்லியனை எட்டியது. இத்தொகை 123 ஆண்டுகளுக்குப் பின் 1927ல் இரட்டிப்படைந்தது. அடுத்த 33 ஆண்டுகளில் 1960ல் குடித் தொகை 3 பில்லியனாகியது. அடுத்த 40 ஆண்டுகளில் 1999ல் இத்தொகை இரட்டிப்பாகியது. இன்று குடித்தொகை 6.4 பில்லியனாக உயர்ந்துள்ளது.

நாகரீகமும் தொழில்நுட்பமும் மருத்துவமும் வளர இறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்தது. ஆயுட்காலமும் பிறப்பு வீதமும் அதிகரித்தது. இன்று வளர்ச்சி அடைந்த மேற்குநாடுகளில் பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைகிறது. அந்நாடுகளின் சனத் தொகை முதுமை அடைகிறது. அதனால் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்த தொடர்ந்தும் சனத்தொகையில் வளர்ந்து வரும் வளர்மக நாடுகளில் இருந்து சனத்தொகையை இறக்குமதி செய்யும் நிலையி ல் மேற்குநாடுகள் உள்ளன.

உள்நாட்டு யுத்தங்கள் காரணமாக அகதிகள் பெரும்பாலும் தாமாக விரும்பி மேற்கு நாடுகளுக்கு புலப்பெயர்வதால் அந்நாடுகள் உடனடி சனத் தொகைப் பற்றாக்குறைப் பிரச்சினையை எதிர் நோக்கவில்லை. ஆனால் அண்மைய எதிர்காலத்தில் முதுமையடையும் மேற்கு உலகின் மக்கள் கூட்டத்துக்கு சேவகம் செய்யவும் அவர்களுக்கான ஓய்வுதியக் கொடுப்பனவுகளுக்கான வரி செலுத்தும் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படும் எனவும் பொருளியலாளர்கள் அஞ்சுகின்றனர். இந்நிலையில் மேற்குலகின் வலதுசாரி ஊடகங்கள் அகதிகள் பிரச்சினையை உண்மைக்கு புறம்பாக பூதாகாரமாக்குகின்றனர்.

# எல்லைகள் கடந்த உறவுப் பாலமும் மொழியின் எதிர்காலமும்



நவஜோதி ஜோகரட்னம்

1970 ஆண்டுக் காலப்பகுதி இலங்கையின் அரசியல் வரலாற்றிலும் தமிழரின் சமூக வாழ்வியலிலும் மிக முக்கியமான காலப்பகுதி ஆகும். இலங்கைத் தமிழர்களுக்கு எந்த மனித உரிமையும் மறுக்கப்பட்டபோது குடும்பங்களாகவும் தனித்தவர்களாகவும் உலக நாடுகளில் எல்லாம் அகதிகளாகத் தஞ்கம் புகுந்தனர். மக்கள் போரின் விளைவாக பல வித இழப்புக்களையும் இடப்பெயர்வுகளையும் சந்தித்தார்கள். 1995க்களில் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு எமது வரலாற்றின் ஒரு சோகக் கறை.

இப்படிப் புலம்பெயர்ந்து அந்நிய நாடுகளில் நாம் வாழ நேரிடும்போது தாய் மொழியை, பண்பாட்டை இழந்துபோய் விடுகின்ற சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதனை மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, மொறிஸியஸ் போன்ற நாடுகளை நினைவுபடுத்தி அடை யாளம் காணமுடிகிறது. புலம்பெயர் வாழ்வில் மொழியும், பண்பாடும் மிக முக்கியமானது என நாம் பேசிக்கொண்டாலும் இன்றைய எமது தமிழ்ச் சூழல் மாற்றம் அடைந்து வருகிறது.

உலக நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு வேலை, கல்வி, அரசியல் பிரச்சனைகள் காரணமாக மக்கள் குடியேறி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எமது சமூகத்தினரும் இவ்விதமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். படிக்கும் பாடசாலைஇ வேலை செய்யும் இடங்கள்போன்ற சூழல்களால் நண்பர்கள் உருவாகின்றனர். இவ்வித சமூகச் சூழலில் ஏற்படும் மாற்றங்களால் அவர்களின் வாழ்வு நிலையும் மாற்றம் பெறுகின்றன. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். பெற்றோர்களும் அதனை வரவேற்கும் நிர்ப்பந்தத்துக்குள் காணப்படுகின்றனர்.

இப்போது பரவலாக பிரான்ஸ், ஜேர்மன், லண்டன் போன்ற நாட்டவர்களை இலங்கை நாட்டவர்கள் திருமணம் செய்து வாழ்வதைக் கூடுதலாக அவதானிக்க முடிகின்றது. எதிர்காலத்தில் இவை அதிகமாகத் தொடர்ந்து காணப்படும் என்பதில் ஆச்சரியப்படுவதிற்கில்லை. இந்த வகையில் இலங்கையைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி 'கிஷோர்' என்றழைக்கப்படும் குடும்ப நண்பரைச் சந்திக்க முடிந்தது. அவர் ஒரு கொம்பியூட்டர் என்ஜினியர். எமது நாட்டுப்பிரச்சனைகளின் நிமித்தம் அரசியல் தஞ்சம் கோரி நான்கு வருடங்களாக லண்டனில் வசித்து வருகின்றார்.

கிசோர் தனது நண்பி ஜரீனா என்ற போலாந்துப் பெண்ணை அறிமுகஞ் செய்து வைத்தார். ஜீரீனா போலாந்தில் தென்வடக்குப் பகுதியில் உள்ள 'SILESIA' என்ற பகுதியில் 'SKOROGOSZEZ' என்ற கிராமத்தில் வாழ்ந்தவர். கடந்த ஐந்து வருடங்களாக கல்வி, வேலை நிமித்தம் லண்டனில் வாழ்கிறார். லண்டனில் ஆடை சம்பந்தப்பட்ட கொம்பனி ஒன்றில் வேலை பார்க்கின்றர்.

ஆனால் ஜரினா ஒரு 'ARCHAEOLOGY'. புராதன ANTIC பொருட்களைச் சேகரிப்பதிலும் அவை பற்றி ஆராய்வதிலும் ஆர்வம் கொண்டவர். எதிர்காலத்தில் பழைய பொருட்களை மக்களின் கண்காட்சிக்கு வைக்கும் திட்டம் இருப்பதாகத் தன்னை அறிமுகஞ் செய்து கொண்டதே என்னைக் கவர்ந்தது. வாழ்க்கை என்பது குதிரை அல்ல. அதைச் சவுக்கால் அடித்து மிரட்ட முடியாது. தனக்குத் தெரிந்த இலங்கை நண்பர் ஒருவர் மூலமே கிஷேரின் அறிமுகம் கிடைத்ததாக



ஜரீனா கூறினார். கிஷேர் எதனையும் வெளிப்படையாகப் பேசுவார். மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனம் படைத்தவர். அதனை விட He is very intelligent. கிஷோக் மீது ஏற்பட்ட காதல் அவரைத் தன் வாழ்வின் துணைவராக்கத் தீர்மானித்ததாகக் கூறினா ஜரீனா.

போழுது போக்குகள் என்றபோது சாதாரணமாகவே சினிமா பார்ப்பது, பாடல்களை ரசிப்பது என்றார். அத்தோடு போலாந்து மொழியில் நாடகம், கவிதை, கதை எழுதுவதில் ஆர்வம் என்று ஒரு போடு போட்டா. போலாந்து நாட்டில் வெளியாகும் சஞ்சிகைகளில் தனது ஆக்கங்கள் பிரசுரமாவதாகவும் குறிப்பிட்டா. ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்தேன். இதுவரையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட கவிதைகள் ஏழுதியதாகக் குறிப்பிட்டா.' Bregant Akant' என்ற போலாந்துச் சஞ்சிகையில் பல கவிதைகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இருபதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியதாகக் கூறினா. 1999 ம் ஆண்டில் ஜரினாவின் சிறுகதை ஒன்று அந்த ஆண்டிற்கான சிறந்த சிறுகதையெனத் தெரிவு செய்ததும் போலாந்தில் வெளியாகும் 'KALENDER OPOLSKI' என்ற சஞ்சிகையில் பிரசுரித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

அவவின் இலக்கிய ஆர்வத்தைக் கண்டு மகிழ்ந்துபோனேன். எம் இருவரினதும் இலக்கியங்களை இனங்காணுவதற்கு மொழி தடை யாக இருந்தன. அவவின் எழுத்துக்கள் போலாந்து மொழியிலும் எனது எழுத்துக்கள் தமிழ் மொழியிலும் காணப்பட்டன. 'IN MY MUSICAL HEART' என்ற எனது ஆங்கிலக் கவிதையை மட்டும் பார்வையிட்டுச் சந்தோசப்பட்டா.

கடந்த செப்டம்பர் மாதம் 2004 ம் ஆண்டு கிஷோக - ஜரி னா திருமணம் நடைபெற்றது. போலாந்திலிருந்து பெற்றோர் உறவி னர் வந்து சிறப்பித்திருந்தனர். இலங்கை நிலைப்பாட்டில் எப்படி கிஷேரின் பெற்றோர்கள் இலண்டன் வருவது..? எமது மொழி, பண்பாடு பற்றி கற்றுக்கொள்ள நிறைந்த விருப்பம் தெரிவித்த ஜரினா சாப்பாடுகள், நன்றி, வணக்கம் போன்ற தமிழ்ச் சொற்களைச் சரியாகவே பயன்படுத்தினா! இலங்கை பற்றிய ஆங்கில நூல்களைக் கொடுத்தேன். இத்தனை ஆர்வமுடைய ஜரீனாவுடன் ஆரோக்கியமான விடயங்களை இலக்கியங்களை பரிமாறுகின்ற நண்பிகள் ஆனோம்.

கிோக் - ஜரினா தம்பதிகள் சந்தோஷமாக வாழ்கிறார்கள். எதிர்காலத்தில் இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு போலாந்து மொழியையா? அல்லது தமிழ் மொழியையா? தாய் மொழி ஆக்கிக் கொள்வீர்கள் அல்லது உலக மொழியான ஆங்கிலம் தான் கைகொடுக்குமா? இப்படிக் கேட்டபோது இருவரும் சிரித்துக் கொண்டனர். இப்படியான வாழ்நிலை மாற்றங்களை அவதானிக்கும்போது 'மாறுதல் என்பதே மாறாத தத்துவம்' என்ற அறிவுச்சுடர் கொழுத்திய சோக்கிரட்டீசின் தத்துவம் நினைவிற்கு வந்து போகிறது.

UDHAYAN
NEWS HOTLINE
0208 9525677

RAJ LAW PRACTICE
Free initial consultation.
Expert criminal lawyers
at your service
Trident Business Centre
89 Bickersteth Road
Tooting Broadway - London SW17 9SH
Tel: 020 8516 7730 Fax: 020 8516 7731

SRIHARANS SOLICITORS
AUTHORISED TO ADMINISTER OATH
Professional service for freedom and justice under the Human Rights Act of UK and with European Convention of Human Rights
(P) 020 8843 9977
020 8843 9974 (3 lines)
223 The Broadway
Southall, Middx.

IN TROUBLE WITH THE POLICE
24 Hr. POLICE STATION ATTENDANCE
FREE INITIAL INTERVIEW
ANY CASE CONSIDERED
Mehra & Co.
Solicitors
367 High Road Wembley
Criminal Defence Service
020 8902 1900
Mobile 07956 528 927
07956 463 665


K.Ravi Solicitors
Solicitors & Administrators of Oaths
* Immigration
* Conveyancing
Both Residential & Commercial
* Welfare Matters
* Civil Litigation
* Landlord & Tenant Disputes
Call 020 8866 7800
Suite 2, First Floor (above Abbey National),
410-420 Rayners Lane, Pinner, Middx. HA5 5DY

MORTGAGE PLUS (London) LTD
Mortgages Tailor-made for You
* Specialist in CCJ/Default Cases
Tel:
020 8571 2570
07710 150713
81, South Road, Southall, Middx.
Your home is at risk if you fail to keep up repayments on loans secured on it.

# 'குடும்பமும் கலாச்சார வாழ்வும்'



டொக்கடர் ராஜாமணி



ஜேம்ஸ் டி ஜோசப்

'குடும்பமும் கலாச்சார வாழ்வும்' கருத்தரங்கும் கலைநிகழ்ச்சியும் யூன் 11ல் தொரன்ரன் கீத்தில் இடம்பெற்றது. குரொய்டன் தமிழ் நல்வாழ்வுச் சங்கம் - CTWA, தெ.லண்டன் தமிழர் நலன்நிறையமைப்பு - SLTWG, சிவகுமார் தமிழ் பள்ளி ஆகியவற்றின் கூட்டுழைப்பில் இந்நிகழ்வு இடம்பெற்றது. அங்கு தனிமனித ஒழுக்கத்தின் அவசியத்தை சுட்டிக்காட்டினார் டொக்டர் ராஜேஸ்வரி.


East or west home is best என்று தனது சிறப்பு சொற்பொழிவை ஆரம்பித்த அருட்தந்தை ராஜாமணி, குடும்பமே சமூகத்தின் மூலக் கரு, நல்ல சமூகம் குடும்பத்தில் இருந்து உருவாகிறது என்றார். இனக்குழுமமாக இருந்தவர்கள் குடும்பமாக மாறிய போதே வளர்ச்சி அதிகரித்ததாக சுட்டிக்காட்டிய அவர் கலாச்சாரங்கள் ஏற்றத்தாழ்வு அற்றது என்றும் எல்லாக் கலாச்சாரங்களிலும் நல்ல அம்சங்கள் இருப்பதை சுட்டிக்காட்டினார். சமூகம், பொருளாதாரம், கலாச்சாரம் என்பன முறையே அரசியல், குடும்பம், தனிமனிதன் சம்பந்தப்பட்டது என்று அவர் கூறினார். நீங்கள் நாலு வார்த்தை இங்கிலீஸ் பேசுவதால் தமிழ் அழிந்து விடாது அது பல்லாயிரம் ஆண்டுகளாக ஆழமாக வேரூன்றி உள்ளது என்று அவர் நம்பிக்கையுடன் கூறினார்.

சிவகுமார் பள்ளி மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்கினர். ஜோசப் டி. ஜெயம் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சிகளுக்கிடையே தனது கருத்துக்களையும் வெளியிட்ட டி ஜெயம், உங்கள் கொள்கைகள் கருத்துக்களை குழந்தைகளிடம் திணிக்காதீர்கள் அவர்கள் உங்கள் குப்பைக் கூடைகள் அல்ல என்று குறிப்பிட்டார். தனது சொந்த அனுபவங்களினூடாக குழந்தைகளுக்கு வழியை மட்டும் காட்டுங்கள் அவர்களிடம் எதையும் திணக்க முற்பட வேண்டாம் என்று அணித்தரமாகத் தெரிவித்தார். நிகழ்வில் CTWA தலை வர் அமுல்ராஜ், ஞடுவுறுபு முகாமையாளர் மனோகரன், டொக்டர் ராஜா ஆகியோர் குடும்பமும் கலாச்சார வாழ்வும் பற்றி சொற்பொழிவாற்றினர்.

SLTWG உதவித் தலைவர் டொக்டர் ஆறுமுகராச சான்றிதழ்களை வழங்கினார். மாலை விருந்தாக அமைய வேண்டிய உணவு விழா இரு மணி நேரம் தாமதித்ததால் இராப்போசனமாகியது. CTWA துணைத் தலைவர் ராஜகோபாலின் நன்றியுரையுடன் விழா நிறைவுக்கு வந்தது.

# 'வார்த்தைகளற்ற உலகு' ஒளி ஓவியக்கண்காட்சி

( இலக்கியா - பரிஸ் )



படைப்பாளியும் புகழிட இலக்கியத்தின் முன்னோடியும் சமூக ஆர்வலரும் உயிர்நிழல் சஞ்சிகையின் ஆசிரியரும் எக்சில் வெளியீட்டகத்தின் ஸ்தாபகருமான காலஞ்சென்ற கலைச்செல்வனின் நினைவாக பிரான்ஸில் உள்ள நண்பர்கள் வட்டம் நடாத்திய நோர்வேயில் வசிக்கும் கவி ஞர் தமையந்தியின் ஒளி ஓவி யக் கண்காட்சி ஏப்ரல் 17ல் பாரிஸில் நடைபெற்றது. 'வார்த்தைகளற்ற உலகு' ஏனும் த்லைப்பில் இடம்பெற்ற இக்கண்காட்சியில் தமயந்தியின் நூறு ஒளி ஓவியங்கள், தமயந்தி என்ற கவிஞனின் தேடலோடும் கற்பனையோடும் உள்ளுணர்வின் வெளிப்பாடுகளோடும் கூடிய ஓவியங்களாக கணணியின் துணையால் புதிய பரிமாணங்களையும் வடிவங்களையும் புதிய வண்ணங்களையும் பெற்று காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந்த ஒளி ஓவியக்கண்காட்சியை பார்க்க ஏராளமானோர் வருகை தந்திருந்தனர். இது இன்றைய புலம் பெயர் சூழலில் கலை வெளிப்பாட்டின் புதிய பரிமாணத்தின் தேவைகளையும் அதனை நோக்கிய கவனக் கூர்ப்பையும் வேண்டி நிற்கும் தன்மையின் வெளிப்பாடு என்றே கூறவேண்டும்.

கண்காட்சிக்கு வருகை தந்திருந்தவர்களை ஜேர்மனியில் வசிக்கும் படைப்பாளியும் மொழிபெயர்ப்பாளருமான என் சுசிந்திரன் வரவேற்று உரையாற்றினார். கலைச்செல்வனையும் அவருடனான நட்பையும் இலக்கிய உறவுகளையும் வேதனையுடன் நினைவு கூர்ந்த சுசிந்திரனை தொடர்ந்து இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த திருமறைக் கலாமன்றத்தின் தலைவர் கலாநிதி மரிய சேவியர் அடிகள் உரையாற்றினார். கலைச்செல்வனது பணியையும் அவரது இனிமையான இயல்பையும் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டவர்களோடும் நட்புறவு பேணும் உயர்ந்த பண்பையும் பற்றி பேசிய கலாநிதி மரிய சேவியர் அவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஓவியம், புகைப்படம் போன்ற கலைகளுக்கு ஆதரவு பெருகவில்லை என்று வேதனையோடு கூறிய அவர் தமயந்தி போன்ற கலைஞர்கள் தாயகத்திற்கும் வந்து இக்கலைப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அவரைத் தொடர்ந்து கனடாவிலிருந்து வருகை தந்திருந்த யோர்க் பல்கலைக்கழக சமூகவியல் பேராசிரியர் கவிஞர் சேரன், கலைச்செல்வன் நினைவுகளையும் தமயந்தியின் ஒளி ஓவியங்களையும் பற்றி தன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். 1986ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தமயந்தியின் புகைப்படக் கண்காட்சியை நினைவு கூர்ந்த அவர் தமயந்தியின் புதிய ஒளி ஓவியங்கள் பற்றியும் தமிழ்ச் சமூகம் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்தும் வலியுறுத்தினார். 2004 டிசம்பர் மாதம் கலைச்செல்வனோடு கண்காட்சி நடைபெறும் இம்மண்டபத்தில் நண்பர்கள் வட்டம் நடத்திய இன்னொரு கூட்டத்தில் பங்குபற்றியமை பற்றியும் கலைச்செல்வனின் அந்த நினைவுகளையும் வேதனையோடு பகிர்ந்துகொண்டார்.



இறந்துபோன நண்பர்கள் கலைஞர்களை நினைவுகொள்ளும் வகையில் இத்தகைய கண்காட்சிகளை ஒழுங்கு செய்வது அவர்களது வாழ்வுக்கும் பணிக்கும் நாம் செலுத்தும் நல் வணக்கமாக அமையும் என்பதில் ஐயமில்லை.




# லண்டன் தமிழ் மையத்தின் பரிசளிப்பு விழா

லண்டன் தமிழ் மையத்தின் 'Speech Day' யூலை 10ல் வெம்பிளி ஹை ரெக்னோலஜி கொலிஜில் இடம்பெற்றது. தமிழ், பேச்சு, நடனம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், வீணை, வயலின், புல்லாங்குழல், கீபோர்ட், விளையாட்டு என வெவ்வேறு அம்சங்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பாலர்கள் முதல் உயர்நிலை வரை 400 மாணவர்கள் கற்கும் லண்டன் தமிழ் மையம் லண்டனில் உள்ள தமிழ் பள்ளிகளில் மிகவும் முன்னணியில் திகழ்கிறது. தற்போது இங்கு கல்விகற்று வெளியேறிய மாணவர்களை இணைக்கும் வகையில் பழைய மாணவர் அமைப்பு ஒன்றினை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

வெவ்வேறு வயதினர் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் இடம்பெற்றது. ஒவ்வொரு குழுவினரும் வெவ்வேறு போட்டிகளில் கலந்து கொண்டனர். இவர்களில் சங்கீரன் சிறிநாதன் சகலதுறைகளுக்கான விருதைத் தட்டிச் சென்றார். நிதிஸ் சுகுமார் (வீணை), மகிஷா நந்தகுமார் (பேச்சு) , அருட்குமரன் சூரியகுமார் (பேச்சு), மாதுமை நவநீதானந்தன் (பேச்சு), நிசாந்திரி சிவநாதன் (வாய்ப்பாட்டு), சர்மிலா தர்மகுலசிங்கம் (தமிழ்), நிருபி சண்முகதாஸ் (நடனம்), சேரன் சபாநாதன் (மிருதங்கம்), பவித்ரா நரேந்திரன் (வயலின்) ஆகியோர் வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றனர். லண்டன் தமிழ் நிலையத்தினால் வெளியிடப்பட்ட கையேட்டில் போட்டிகளும் வெற்றி பெற்றோர்களின் பட்டியலும் வெளியிடப்பட்டு உள்ளது.

டொக்டர் நித்தியானந்தனை கல்வியியல் இயக்குநராகக் கொண்ட லண்டன் தமிழ் மையத்தில் இளவயதினருக்கான அபிவிருத்திக் குழு இயங்குகிறது. இக்குழு தமிழ் கல்வி, நுண்கலை இவற்றுக்கு அப்பாலும் மாணவர்களை ஈடுபடுத்துவது குறிப்பிடத்தக்கது.





MARKANDAN & CO SOLICITORS
We specialise in
- குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
- விவாக விண்ணப்பங்கள்
- அகதி விண்ணப்பங்கள்
- 10 வருட அல்லது 7 வருட வதிவிட தகைமை விண்ணப்பங்கள்
- பிரித்தானிய பிரஜாவுரிமை
- வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்.
- வீடு/மனை/வியாபார ஸ்தலங்கள் வாங்க, விற்க, குத்தகைக்கு விடுதல் சம்பந்தமான விடயங்கள்
- விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் - No Win - No Fee அடிப்படையில்
- பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்கான ஆங்கில மொழித் தேர்ச்சி தகுதிச் சான்றிதழ்

M

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானியா அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந் நாட்டில் திருமணம் புரியவிரும்பின் நீங்கள் பிரித்தானியா உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

TEL : 0208 514 8188/07946010022
[illegible] 720 Romford Road, Manor Park, London, E12 6BT

Graphical Impact
Signs ~ Designs ~ Graphics
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332
www.graphicalimpact.com

## நீதிமன்றில் இளம் பெண்மீது அபாண்டமான பழி

## அப்பெண்ணை தாக்கிய இளைஞருக்கு அபராதம் விதிக்கப்பட்டது

இளம் பெண் சிந்துவை (பெயர் மாற்றப்பட்டு உள்ளது) அவரது வேலையிடத்தில் வைத்துத் தாக்கிய விமலேஸ்வரன் (பெயர் மாற்றப்பட்டு உள்ளது) என்ற இளைஞருக்கு நீதிமன்றம் £400 அபராதம் விதித்துள்ளது. வேலையிடத்துக்கு தனது சகாக்களுடன் வந்த விமலேஸ்வரன் சிந்துவை கடுமையாக தாக்கி பயமுறுத்திச் சென்றுள்ளார்.

சம்பவப் பின்னணி :

சிந்துவும் விமலேஸ்வரனும் ஒரே ஊரவர்கள் பல மாதங்களாக காதலர்கள். விமலேஸ்வரன் மூலம் சிந்து கர்ப்பமானார். அதன் பின் விமலேஸ்வரனுக்கு அவரது உறவினர்கள் மணப்பெண் தேடினர். சிந்து பற்றி விசாரித்த போது சிந்துவை விமலேஸ்வரனின் குடும்பத்தினர் தூற்றி உள்ளனர். இது சிந்துவின் காதுகளுக்கு எட்ட அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்த சிந்து தனக்கும் விமலேஸ்வரனுக்கும் உள்ள உறவை வெளிப்படுத்தி உள்ளார். விமலேஸ்வரனால் தான் கருவுற்றதையும் சிந்து வெளிப்படுத்தினார். அதனைக் கேள்விப்பட்ட விமலேஸ்வரன் சிந்து நடத்தை கெட்டவள், விபச்சாரி என்று தனது உறவுகளுக்கு தெரிவித்து உள்ளார். தன்னைப்பற்றிய உண்மைகளை சிந்து வெளிப்படுத்தியதால் ஆத்திரமடைந்த விமலேஸ்வரன் சிந்துவை வேலையிடத்துக்குச் சென்று தாக்கி உள்ளார்.

நீதிமன்றில் :

நீதிமன்றில் குறுக்கு விசாரணையில் சிந்துவின் கர்ப்பத்திற்கு தான் காரணம் இல்லை என்று மறுத்த விமலேஸ்வரன் பின்னர் தான் சிந்துவுடன் உறவு கொண்டதை ஒப்புக்கொண்டார். நீதிமன்றில் சிந்துவை ஒரு விபச்சாரி என்றும் தனது நண்பர்கள் அவருடன் உறவு வைத்துக் கொண்டதாகவும் தானும் இரு தடவைகள் £200 செலுத்தி உறவில் ஈடுபட்டதாகவும் விமலேஸ்வரன் நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

விசாரணைகளில் தனது பெண்மை அவமதிக்கப்பட்டதால் மனமுடைந்த சிந்து பலதரம் விம்மி அழுதார். அங்கிருந்து வெளியேற்றப்பட்டு அமைதியாக்கப்பட்டு பின்னரே விசாரணைகள் தொடர்ந்தது. விமலேஸ்வரனின் அவமதிப்புகள், குற்றச்சாட்டுகள் பொய்யானவை என நீதிமன்றம் கூறியது. சிந்துவின் துணிவும் நியா யத்துக்கான அவரது போராட்ட மும் பாராட்டப்பட்டது. சிந்து தாக்கப்பட்டதால் ஏற்பட்ட காயங்களுக்கும் அதற்கான சிகிச்சைக்கும் விமலேஸ்வரனுக்கு £400 அபராதம் விதிக்கப்பட்டது.

## போதையில் குத்தியவர் தெளிந்ததும் கதறி அழுதார்

பேவறைட் பிறைட் சிக்கின் சிற்றுண்டிச்சாலையில் மதுவருந்திய பின் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கொலையில் முடிந்துள்ளது. லூசியத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரு குழந்தைகளின் தந்தையான நல்லதம்பி தவராஜா கத்திக் குத்தினால் மரணமடைந்தார். இக்கொலை தொடர்பாக சக ஊழியரான தியாகரா்ஜா திருக்குமரன் (45) கைது செய்யப்பட்டு உள்ளார். செப்ரம்பர் 26ல் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படும்வரை திருக்குமரன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இரவு சிற்றுண்டிச்சாலை மூடிய பின் அங்கு பணியாற்றிய நண்பர்கள் மூவர் மது அருந்தினர். போதை தலைக்கேறி அவர்கள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். விளையாட்டாக ஆரம்பித்து. ஒருவர் ‘குத்துவேன்’ என்று சொல்ல மற்றவர் ‘குத்து பார்ப்பம்’ என்று தர்க்கித்தனர். குத்துவேன் என்றவர் சிற்றுண்டிச்சாலையில் கோழி வெட்ட பயன்படுத்திய கத்தியை எடுத்து நல்லதம்பி தவராஜா மீது செருகினார்.

குடலின் ஒரு பகுதி வெளியே வந்துவிட்டது. உடனடியாக மருத்துவ வண்டிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இருவரும் வெளியே வந்த குடலை மீண்டும் உள்ளே தள்ளி சரிப்படுத்த முயற்சி செய்தனர். போதையில் நிதானத்தை இழந்து இருந்தவர்களின் போதை தெளிய ஆரம்பித்தது. குத்தியவர் கதறி அழுதார்.

தனது சிற்றுண்டிச் சாலையை மூடிவிட்டு இரவு இரண்டு மணியளவில் அப்பகுதியால் சென்ற அவர்களின் நண்பர் சிற்றுண்டிச்சாலையில் நடமாட்டத்தை அவதானித்துவிட்டு ஏன் இன்னும் இவர்கள் வீட்டுக்குச் செல்லவில்லை என்பதை அறிய அங்கு சென்றார். அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. தன்னை சுதாகரித்துக் கொண்டு. மருத்துவ வண்டிக்கும் பொலிசாருக்கும் அவர் தகவல் கொடுத்தார். பொலிசார் ஸ்தலத்துக்கு வந்த போது தியாகராஜா திருக்குமார் கத்தியை பொலிசில் கொடுத்து அழுதார்.

சம்பவம் பற்றித் தெரிவித்த சம்பந்தப்பட்டவர்களின் நண்பர், இது சம்பந்தப்பட்ட இருவருக்குமே மிகவும் பரிதாபகரமான முடிவு என்று தெரிவித்தார்.

## கம்பவாருதிக்கு கடுமையான எதிர்ப்பு



யூலை 2 பூபாள ராகங்கள் விழாவுக்கு வந்திருந்த கம்பவாருதி ஜெயராஜின் (படம்) வருகை லண்டனில் பலத்த எதிர்ப்பலையை ஏற்படுத்தி உள்ளது. கடந்த முறை லண்டன் வந்து திரும்பிய பின் ஜெயராஜ் புலம்பெயர்நத தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் மல்லிகை இதழில் எழுதிய ‘வராய் வரவல்லாய்’ என்ற கட்டுரையே இந்த எதிர்ப்பலைக்குக் காரணம். பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் என்பன ஜெயராஜ்ஜின் வருகையை வன்மையாகக் கண்டித்து உள்ளன.

தாயகத்தில் இருந்து புலம்பெயர் நாடுகளுக்கு வருபவர்கள் அல்லது வரவழைக்கப்படுபவர்கள் மிகவும் கௌரவிக்கப்பட்டு பாராட்டப்படுவதுடன் ஊடகங்களில் அவர்கள் பற்றிய செய்திகளும் அவர்களது நேர்முகங்களும் இடம்பெறுவது வழக்கம். ஆனால் ஜெயராஜின் வருகை அறியப்பட்டவுடனேயே ஜெயராஜ்க்கு எதிரான அலை பெரும்பாலான ஊடகங்களில் வெளிவந்தது. இன்னும் சில ஊடகங்கள் ஜெயராஜின் செய்தி அல்லது நேர்காணலை முற்றாகத் தவிர்த்தன.

லண்டனில் உள்ள பெண்ணிலைவாதிகளும் ஜெயராஜ்க்கு எதிரான எதிர்ப்பில் இணைந்து கொண்டனர். ஜெயராஜ் தலைமை தாங்கி நடத்திய பட்டிமன்றத்தில் பெண்கள் பற்றிய கொச்சைத்தனமான கருத்துக்கள் வெளிப்பட்டதாக பெண்கள் சந்திப்பு மாநாட்டை ஏற்பாடு செய்துவரும் முன்னணி பெண்ணிய எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

### Peace for Paradise

மாணிக்கம் யோகேஸ்வரனின் Peace for Paradise இறுவெட்டு வெளியீடு யூலை 23ல் நடைபெற்றது. இது இலங்கையில் நடைபெறும் சமாதான செயற்பாடுகளை ஊக்குவிக்குமுகமாக அதற்காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

## சென்ஜோன்ஸ் அதிபருக்கு கனடாவில் அஞ்சலி

படுகொலை செய்யப்பட்ட யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் சி இ ஆனந்தராஜாவுக்கு ரொரன்ரோவில் அஞ்சலி செலுத்தப்பட்டது. 20 ஆண்டுகளுக்கு முன் 1985 யூன் 26ல் ஆனந்தராஜா சுட்டுக்கொல்லப்பட்டார். யூலை 10ல் இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தை காலம் சென்றவரின் மனைவி திருமதி ஆனந்தராஜா உருவப்படத்திற்கு மலர் வைத்து மெழுகுவர்த்தி ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

அஞ்சலிக் கூட்டத்தில் ஆனந்தராஜாவின் குடும்ப உறுப்பினர்களுடன் கல்லூரியின் பழைய மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டனர். ஸ்காபறோ விலேஜ் ரீகிரியேசன் சென்ரரில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பழைய மாணவர்கள் ந மு பொன்னம்பலம், ரி மகேந்திரன், எம் டேவிட்சன், மனித உரிமைவாதி கெவின் சிமின் ஆகியோர் உரையாற்றினர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் படுகொலை செய்யப்பட்ட புத்திஜீவியாக ஆனந்தராஜா உள்ளார். இலங்கை இராணுவத்துடன் நட்புரீதியான கிரிக்கட் போட்டியை ஒழுங்கு செய்ததையடுத்தே இவரது படுகொலை இடம்பெற்றது. ஆனந்தாராஜின் கொலை தொடர்பாக வி.புலிகளை டேவிற்சன் கண்டித்தார். வரலாற்று ஓட்டத்தில் இவ்வாறான பல நட்பு நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதை டேவிட்சன் அங்கு சுட்டிக்காட்டினார்.

3ம் பக்கத் தொடர்ச்சி

## லண்டனில் கொல்லப்பட்ட இளைஞர்




சம்பவம் :

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; இல்பேர்ட் லேன் - ஜேர்சி ரோட் மூலையில் இருந்த ஷெல் பெற்றோல் நிலையத்திற்கு வெள்ளி நடுஇரவு 12:04க்கு பொலிசார் அழைக்கப்பட்டனர். போர்கோட்டில் இளைஞர் ஒருவர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார். அம்புலன்ஸ் சேர்விசும் அழைக்கப்பட்டு இளைஞர் கிழக்கு இலண்டன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். கொண்டு செல்லப்பட்டு சிறிது நேரத்தில் அவ்விளைஞர் உயிரிழந்தார். உயிரிழந்த இவ்விளைஞர் அவரது நெருங்கிய உறவினர்களால் பிரபாகரன் கிருஷ்ணசாமி என அடையாளம் காணப்பட்டார். இவர் கத்திக் குத்தால் ஏற்பட்ட காயத்தால் கொல்லப்பட்டதாக மறுநாள் மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டது.

பெற்றோல் நிலையத்துக்கு தனது நண்பர்களுடன் பிரபாகரன் வந்துள்ளார். வேறு குழு இளைஞர்கள் பிரபாகரனை கத்தியால் குத்த அவருடன் வந்த நண்பர்கள் தப்பியோடினர். இந்த நண்பர்கள் உடனடியாக தங்களைத் தொடர்புகொள்ளும் படி பொலிசார் கேட்டுக் கொண்டுள்ளனர். பொலிசார் பொது மக்களிடம் இருந்தும் தகவல்களை சேகரித்து வருகின்றனர். மேலும் சம்பவ இடத்தில் இருந்து இருவர் கிரீம் அல்லது வெள்ளை நிறக் காரில் ஜேர்சி ரோட்டூடாகச் சென்றுள்ளனர். இவர்களுடனும் பொலிசார் பேச விரும்புவதாகத் தெரிவிக்கின்றனர்.

கொலை இடம்பெற்ற இடத்தில் பிரபாகரனின் பிறேம் செய்யப்பட்ட உருவப்படம் வைக்கப்பட்டு மலர்கள் வைக்கப்பட்டு உள்ளது.

இளைஞரின் பின்னணி :

கிருஷ்ணசாமி தம்பதிகளின் நான்கு குழந்தைகளில் இரண்டாவது மகன் பிரபாகரன். இவருடைய முத்த சகோதரர் லண்டனில் உள்ளார். சகோதரிகளில் ஒருவர் இலங்கையிலும் மற்றுமொருவர் சுவிஸிலும் வாழ்கின்றனர். இளைஞர் குழுவுடன் தொடர்புடைய இவரது வாழ்வில் காதல் மலர்ந்ததைத் தொடர்ந்து இளைஞர் குழுவில் இருந்து ஒதுங்கி லண்டனுக்கு வெளியே ஒக்ஸ்போர்டில் உள்ள பெற்றோல் ஸ்ரேசனில் பணிபுரிந்து வந்தார். உறவினர் ஒருவரின் திருமணத்தில் கலந்து கொள்ள லண்டன் வந்திருந்ததாகவும் அப்போதே இப்படுகொலைச் சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது. தனது திருமணம் பற்றியும் அவர் ஆர்வமுடன் இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் வாழ்க்கையில் மலரவேண்டிய பருவத்தில் 22 வயதில் இந்த உயிர் பறிக்கப்பட்டு உள்ளது.

தந்தை கிருஷ்ணசாமி தலைவர் பிரபாகரன் மீதுள்ள மதிப்பினாலும் விசுவாசத்தினாலும் தனது மகனுக்கும் அவருடைய பெயரையே வைத்ததாக உறவினர் ஒருவர் குறிப்பிட்டார். ஆனால் இலங்கை இனப்பிரச்சினையினூடாக பிறந்து வளர்ந்த பிரபாகரன் அநியாயமான முறையில் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் வேண்டுகோள் :

இப்படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை டிசிஜ நொயல் பெஸ்விக் மேற்கொண்டுள்ளார். “நடுஇரவைத் தாண்டு முன்னரே சுறுசுறுப்பான வீதியில் இளைஞர் ஒருவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டு உள்ளார். தேவையற்ற, உணர்வுகளற்ற முறையில் 22 வயதேயான இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டு உள்ளார். சாட்சிகள் உடனடியாக பொலிசாரைத் தொடர்பு கொள்ளவும்” என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் அவ்விசாரணை அதிகாரி. ( ஒப்பிரேசன் என்வர் : தமிழ் கொட்லைன் : 0800 5872935 ) இக்கொலை தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

2000 ஆண்டு முதல் லண்டனில் தமிழ் இளைஞர் குழுக்களுக்குமிடையேயான வன்முறைச் சம்பவங்கள் மிக மோசமடைந்திருந்த நிலையில் அதனை கட்டுப்படுத்த ஸ்கொட்லன்ட் யாட் ஒப்பிரேசன் என்வர் என்ற விசேட பொலிஸ் பிரிவை ஏற்படுத்தியிருந்தது. இதனால் வன்முறைகளை கட்டுப்படுத்த முடிந்ததேயொழிய அவற்றை முற்றாக நிறுத்த முடியவில்லையென ஸ்கொட்லன்ட் யாட் அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார். தற்போது வன்முறையில் தொடர்புபட்ட 500க்கும் மேற்பட்ட இளைஞர்களின் தகவல்கள் கணணியில் சேகரிக்கப்பட்டு உள்ளது. அவர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு நகர்ந்திருப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.




For News & Advertising: 020 8952 5677
For Distributions: 020 8905 7775

## இணையுமா பொங்கும் பொழுதுகள்





மானிப்பாய் இந்துக் கல்லூரி ப.மா சங்கத்தின் பொங்கும் பொழுது, 05 மே 29ல் வூட்பிறிஜ் கை ஸ்கூலில் இடம்பெற்றது. கர்நாடக சங்கீத இசைவல்லுநரான ஸ்ரீமதி மாதினி சிறீஸ்கந்தராஜா, சமூக சேவையாளர் சொ கருணலிங்கம் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர். கல்லூரி வளர்ச்சிக்காக நடத்தப்படும் இக்கலை நிகழ்வில் இம்முறை £2,500 வரை கல்லூரிக்கு அனுப்பப்படும் என சங்கத்தின் தலைவர் ரவீந்திரமோகன் தெரிவித்தார்.

கடந்த இரு ஆண்டுகளாக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் பிரிந்தே இயங்குகின்றன. ஒரு பிரிவுக்கு ரவீந்திரமோகனும் மற்றைய பிரிவுக்கு குமாரராஜனும் தலைமை தாங்குகின்றனர். இரு பிரிவுகளும் தனித் தனியாக பொங்கும் பொழுது நிகழ்ச்சியை நடாத்துகின்றன. கல்லூரி வளர்ச்சியில் அக்கறையுடைய பலரும் இச்சங்கங்கள் மீண்டும் இணைந்து இயங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றனர். பொங்கும் பொழுது, 06 நிகழ்விற்கு முன் பிரிந்துள்ள ப.மா சங்கங்கள் ஒன்றிணையும் என ரவீந்திரமோகன் நம்பிக்கை வெளியிட்டு உள்ளார்.

## ஜேர்மனியில் லண்டன் பொன்மாலைப் பொழுது

லண்டன் தமிழ் வானொலியின் பொன் மாலைப் பொழுது மே 14ல் ஜேர்மனியின் வீட்சே நகரில் நடைபெற்றது. அங்கு சம்தஸ்வரா கல்லூரி அதிபர் கலைவாணி ஏகானந்தராசாவின் பெற்றோரே தெய்வங்கள் என்ற இசைப்பேழை வெளியீட்டு விழாவும் இடம்பெற்றது. லண்டன் தமிழ் வானொலியின் நேயர்களும் கலை, இலக்கிய நண்பர்களும் பெருமளவில் கலந்து கொண்ட இவ்விழாவுக்கு மண் சஞ்சிகையின் ஆசிரியர் சிவாசா தலைமை தாங்கினார்.

லண்டன் தமிழ் வானொலியின் சிறுவர் குழாமின் கிராமிய நடனம், மேலைத்தேச நடனம், சினிமா நடனம், ஆடல், பாடல், போன்ற கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றது. இந்நிகழ்வை சிறுவர்களே தொகுத்து வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. லண்டனில் இயங்கும் வானொலிகள் அனைத்துமே பிரித்தானியாவுக்கு வெளியே ஏனைய ஐரோப்பிய நாடுகளிலேயே அதிக கேட்போரைக் கொண்டுள்ளன.

## மண் சஞ்சிகையின் வயது 15









ஜேர்மன் மண் சஞ்சிகையின் 15வது ஆண்டு நிகழ்வும் பரிசளிப்பும் டுயிஸ்பேர்க்கில் ஏப் 23ல் இடம்பெற்றது. இச்சிறார் நிகழ்வில் பேச்சு, பாட்டு, கவிதை, கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது. எழுத்தாளர் சிறி ஜீவகன், எழுத்தாளர் சுந்தரம்பாள் பாலச்சந்திரன், கவிஞர் அம்பலவன் புவனேந்திரன் ஆகியோர் நடுவர்களாகக் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாயாஜாலம், கவிதைகள், நாடகம், நடனம் என பல்வேறம்சங்கள் இடம்பெற்றது. மண் ஆசிரியர் சிவராஜா தாயகத்து மக்களுக்கு உதவுவதையும் கடந்த 15 ஆண்டுகளாக செய்துவருகிறார். அதுபற்றிய கண்காட்சியும் புத்தகக் கண்காட்சியும் அங்கு இடம்பெற்றது. லண்டனில் இருந்து நூலகவியலாளர் என் செல்வராஜா, பெஸ்ற் ஓடியோ கலையகப் பணிப்பாளர் நடாமோகன், ஐபிசி அறிவிப்பாளர் பரா பிரபா, கவிஞர் பா வை ஜெயபாலன் ஆகியோர் இந்நிகழ்ச்சிகளில் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். டுயிஸ்பேர்க் நகர பிதா பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.



## கடற்கரையில் அந்தக் கல்லறைகள்

கடற்கரையில் அந்தக் கல்லறைகள் என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா ஜேர்மனி காமாட்சி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்றது. தென்றல்வரும் தெரு, விடியலின் முகவரி ஆகிய கவிதை நூல்களை வெளியிட்ட பாரிஸ், சரீஸ் தனது மூன்றாவது படைப்பாக கடற்கரையில் அந்தக் கல்லறைகள் என்ற சுனாமி அனர்த்தத்தின் கவிதை தொகுப்பை வெளியட்டு உள்ளார். இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு வண்ணை தெய்வம் தலைமை தாங்கினார்.

### ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை :
## 16வது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

இவ்லிழா யூன்18ல் டோர்ட்முண்ட் நகரில் நடைபெற்றது. ஜேர்மனியில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்க் கல்விச்சேவை முயற்சி இதுவாகும். 12 பாடசாலகளுடன் ஸ்ரீ ஜீவகனின் முயற்சியில் ஆரம்பித்த இக்கல்விச்சேவை, 16 ஆண்டுக்கால வளர்ச்சியில் 40 தமிழ்ப் பாடசாலைகள் உருவாகி வளர்ந்துள்ளன. இன்று விடுதலைப்புலிகளின் ஆதரவில் நடத்தப்பட்டு வரும் தமிழாலயக் கல்விச் சேவையில் இணைந்து பணியாற்றும் முக்கியஸ்தர்களான இ.நாகலிங்கம், சு.பாக்கியநாதன் போன்றோர் இக்கல்விச்சேவையின் ஆரம்பகால உறுப்பினராக இருந்துள்ளனர்.

பிரதம அதிதியாக லண்டனில் இருந்து நூலகர் என். செல்வராஜா கலந்து சிறப்பித்திருந்தார். தமிழ் மொழிக் கல்வி, தமிழர் கலைகளுடன் அவர்களது கற்பித்தல் பரப்பு நின்று விடக்கூடாது என்றும், இன்று பன்மொழிப்புலமையுடன் வளரும் இரண்டாம் தலைமுறைச் சிறார்கள் ஐரோப்பிய நாட்டு நூலகங்களிலும், ஆவணக் காப்பகங்களிலும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள எமது வரலாற்று ஆதாரங்களை தேடிச் சென்று ஆராய்ந்து எமது இனத்தின் மறைக்கப்பட்ட நவீன வரலாற்றை எழுதவேண்டும் என்றும் அதற்கு ஆசிரியர்கள் உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

Member of CPSA
Appointed agents of N&N Cheque cashing
MoneyGram
PORTICO
TALKING PAGES 0800 600 900
The Global Travel Group
Property Management & Worldwide Money Transfering
Your Elegant entry to the world of Property and Travel
Worldwide Money Transfer, Cheque Cashing and Currency Exchange
EXPRESS MONEY
World Wide Transfer of Money
Express Money offers you worldwide money transfers in minutes.
Sending money to relatives or friends, or making international purchases, has never been easier. With offices in Canada, Australia, across Europe, Africa, Middle East, and Latin America, Express Money offers a guaranteed and quick way of transferring your money.
CHEQUEPOINT
Transfer to bank account or collect in cash.
Same day. Next day.
MoneyGram
Fast, Secure, Easy, Convenient
Send & Receive in 10 mins only
Dollar Payout NEW LOW FEES Ask for details
GREAT NEWS!! Send up to £2k for flat rate of just £20. Ask for details
CHEQUE CASHING
Cheques cashed instantly
Walk in with your cheque. Walk out with your cash!
Absolutely no need for ..............................
Why wait 5 days for your cheque to get cleared when you could have the cash now?
We Buy & Sell Major International Currencies. 0% commission
LANDLORDS!
Experience the difference of service at PORTICO!
Let your property within DAYS not weeks!
Let us help you make the most of youir investment!
We urgently need 1, 2 and 3 bedroom properties in:
Wembley, Alperton, Sudbury, Kenton, Kingsbury, Neasden, Harrow, Greenford + immediate surroundings.
For quality service, Try Us!
Competitive commision rates
Speedy, Efficient and Friendly service
Fully computerized network
WE TAKE PRIDE IN OUR REPUTATIO!
YOU TAKE PRIDE IN OUR SERVICE!
201 Preston Road, Wembley. Tel: 020 8908 1900
Website: www.portico.co.uk

# வோல்தம்ஸ்ரோவில் வீடு தீக்கிரை குழந்தைகள் அதிஸ்ரவசமாக உயிர் தப்பினர்

வோல்தம்ஸ்ரோ ஹையம் கில் றோட்டில் உள்ள வீட்டில் யூலை 14 அதிகாலை 1:45 அளவில் தீப்பிடித்தது. வீட்டில் அப்போது உறங்கிக் கொண்டிருந்த 28 வயதான தமிழ் பெண்ணும் அவரது இரு குழந்தைகளும் ஸ்மோக் அலாம் சத்தம் கேட்டு எழுந்தனர். முத்த குழந்தைக்கு வயது 2. மற்றைய குழந்தையின் வயது நான்கு மாதங்களே. லண்டன் தீயணைப்புப் படை யினர் முதல் மாடியிலிருந்த ஜன்னலினூடாக அவர்களைக் காப்பாற்றினர்.

மேலும் 18, 23 வயதுடைய இரு இளைஞர்கள் அச்சமயம் அங்கு தங்கி இருந்தனர். அதில் 18 வயதான இளைஞர் எரிகாயங்களுக்கு உள்ளாகி எசெக்ஸ் பகுதியில் உள்ள மருத்துவ மனையொன்றில் சிகிச்சை பெற்று வருகிறார். ஆயினும் அவரது காயங்கள் ஆபத்தானவை அல்ல என பொலிஸ் செய்தி தெரிவிக்கிறது. ஏனையவர்கள் விப்ஸ்குறொஸ் மருத்துவமனையில் புகையை சுவாசித்ததற்காக சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

இத்தீ விபத்து திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு இருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர். வீட்டின் கீழ்பகுதியை பெற்றோல் இட்டு கொழுத்த முயற்சித்ததாக பொலிசார் கருதுகின்றனர். சந்தேகத் திற்குரிய இரு ஆண்கள் அந்த முகவரியில் இருந்து ஓடியதாக பொலிஸ் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது. தகவல் கொடுக்க விரும்புபவர்கள் சிங்போர்ட் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கொடுக்கலாம். இல : 020 8345 3043 அல்லது என்வர் ரமிழ் ஹொட் லைன் 0800 587 2935.

GALAXY WINDOWS
Double Glazed Windows
From £99 Each

Telephone Galaxy Windows Hotline 020 8427 3888
FENSA

B & B TIMBER & BUILDING MERCHANTS
For all your building and timber needs.
Timber cut to size.
Open: MON - SAT 8 am to 6 pm
WED only 8 am to 1 pm
Call 020 8574 6691
020 8571 3430
6,7,8 - North Parade, North Road, Southall

தமிழில் பேசி உங்கள் எண்ணங்களைத் தெரிவித்து முடி அலங்காரம் செய்ய
Royal Saloon & Beauty Parlour
றோயல் சலூன்
பயிற்சி பெற்ற இரு பெண்கள் பெண்களுக்கான அலங்காரங்களை செய்கின்றனர்.
தொடர்புகளுக்கு செல்வன் -
07903013374
Gents - £4.00 Children £3.00 O.A.P. £3.00 Baby Girl £5.00
159 Upper Tooting Road, London, SW17 7TJ,
Open 7 Days a Week – ( 9am to 8pm )

UDHAYAN
To Publish Your Articles call:
0208 952 5677

SAMS Accounting Services Ltd.
* Audit & Accountancy
* Prepare Monthly Management Accounts
* Tax Planning & Refund
* Specialists in Solicitor Accounting
* SAGE Line 50/Payroll
Call Mrs. Sumathi Jankan on
020 8509 8484
077 1557 6989
Email: info@samsaccounting.co.uk
92a Forest Road, Walthamstow, London E17 6JQ

FREEHOLD CASH AND CARRY FOR SALE
The relocation of a well established London Cash and Carry to larger premises, could make available for sale the freehold of their existing 40,000 sq ft warehouse to the right party.
For further details please send, in confidence, your name, address and contact details, to either:
FAX: 0208 3572592
or e-mail: businessforsale@hotmail.com

wood floor showroom
HERE ARE SOME OF OUR SPECIAL OFFERS FOR 2005
Supply & fit Laminate wood - £25 per sqm.
Solid Oak 130x18 £25 per sqm
Beach & Oak Engineered wood £16.99 per sqm
Click on Laminate £9.99 per sqm
An Unbeatable Price On Engineered Wood
COME AND SEE FOR YOURSELF
21 North Parade, Mollison Way, Edgware, Middlesex HA8 5QH
Tel: 020 8951 4395/4495 Fax: 020 8951 4251

K SHAN BUILDERS
BUILDING CONTRACTORS
For your home needs:
Roofing, Extension, Flooring, Wiring, Plumbing, Central Heating, Carpentry, Brickwork, Driveways, Decorating, Painting, Kitchen and Bathroom Fitting

Contact K. Shan:
Tel: 020 8478 3587
Mob: 07949 703 431
Email: shalanda2003@yahoo.com

LONDON CELLULAR - 020 8459 6914
500 Minutes
Anytime - Any Network
100 Texts Messages
3 months Free Insurance
LG U8138 Phone Free
Free Accessories

99p per month
1st 6 months
100 High Road, Willesden Green, London NW10

AIR SAVERS TRAVEL
0208 540 2226

| | | | |
|---|---|---|---|
| Colombo | £320 | Madras | £400 |
| Toronto | £250 | Australia | £475 |
| Bombay | £315 | Singapore | £360 |
| Kuala Lum | £370 | New York | £135 |
| Trichy | £415 | Bangalore | £415 |

All Major Credit Cards Accepted

Shankara Asian Arts
Bharatanatyam & Modern Dance and Music Teacher Needed
07736804028

Promet Technology Ltd.
Architectural and Structural Steelwork
Call us on:
020 8965 0500
or Fax:
020 8965 3030

HARTEX
ESTABLISHED 1969
THE GREAT OUT DOORS
· COMBAT · PULLOVERS · MAP CASES · THERMAL UNDERWEAR
· RAINWEAR · BODY WARMERS · SHORTS · COMPRESSORS BAGS
· CLOTHING · BOOTS · COOKWARE · MONEY BELTS
· HIKING BOOTS · HAMMOCKS · CUTLERY SETS · PLATES · WEBBING
· GLOVES · HEADWEAR · HIKING BOOTS
Competitive prices

55 VICTORIA ROAD RUISLIP MANOR MIDDX, HA4 9BS TEL: 01895 634244
321 NORTHOLT ROAD SOUTH HARROW MIDDX, HA2 8JA TEL: 020 8864 3333
OPEN 7 DAYS

TRAVEL (UK) LTD
Worldwide Travel Agents
485 Yeading Lane, Northolt, Middlesex UB5 6LN London (U.K)
Tel: 020 8841 8842
Fax: 020 8842 1079
Web: www.traveluk.ltd.uk
Email: sales@traveluk.ltd.uk

KOtech
PC COMPONENTS AT LOW LOW PRICES
PC's Built To Order
TEL: 08700 27 11 99
www.KOtech.co.uk
KOtech LTD
Unit 3,
Trinity Estate
Silverdale Rd.
Hayes UB3 3BN

skylord travel plc
Opening hours : Mon - Fri 9.30 am - 6 pm, Sat 10.00 - 4.00 pm
Pinner : 0870 027 5061 / Eastcote: 0208 582 1111 / Southall : 0870 027 5067 / London : 0870 027 5061